வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ஈழநாடு




Email : news@eelanadu.lk மலர் : 03 14.05.2022 சனிக்கிழமை இதழ் : 159 பக்கங்கள் : 16

# பிரதமர் ரணிலுக்கு வலுக்கிறது எதிர்ப்பு!

- ஆதரவளிக்க மறுத்தன எதிர்க்கட்சிகள்
- சிறுபான்மை கட்சிகளும் கைவிரித்தன
- பெரும்பான்மையை நிரூபிப்பதில் சிக்கல்?
- ஆதரவு சேகரிக்க ஜனாதிபதி விசேட சந்திப்பு
- மொட்டு கட்சிக்குள்ளும் இருவேறுபட்ட நிலை

கொழும்பு, மே 14

புதிதாகப் பதவியேற்ற பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிர்க்கட்சிகள் ஆதரவு வழங்கப்போவதில்லை என்று அறிவித்துள்ளன. இந்நிலையில், தமது நிலைப்பாட்டை தெளிவாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அறிவிக்காத போதிலும், அமைச்சுப் பதவிகளைப் பொறுப்பேற்காது என்று தெரிவித்துள்ளது.

நாட்டின் 26ஆவது பிரதமராக ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டார். ஒரேயொரு பாராளுமன்ற ஆசனத்தை கொண்டுள்ள ஐக்கிய தேசியக் கட்சிக்கு பிரதமர் பதவி வழங்கப்பட்டமைக்கு எதிர்க்கட்சிகள் மத்தியில் கடும் எதிர்ப்பு நிலவுகிறது.

இதனால், இடைக்கால அரசாங்கத்தில் அங்கம் வகிக்கத் தயார் என்று அறிவித்த அந்தக் கட்சிகள் தற்போது ரணிலுக்கு தாம் ஆதரவு அளிக்கப் போவதில்லை என்று பகிரங்கமாக அறிவித்துள்ளன.

சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி, அநுரகுமார திஸநாயக்க தலைமையிலான ஜே.வி. பி., மைத்திரிபால சிறிசேன தலைமையிலான சிறீ லங்கா

15

# இலங்கைக்கு உதவுவதற்கு கூட்டுநிதியம் நிறுவ திட்டம்!

## அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், இந்தியா, ஜப்பான் இணைகின்றன

கொழும்பு, மே 14

**பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள இலங்கையை மீட்பதற்காக அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், இந்தியா, ஜப்பான் நாடுகள் இணைந்து கூட்டு நிதியம் ஒன்றை நிறுவ ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.**

நாட்டின் புதிய பிரதமராக பதவியேற்றுள்ள ரணில் விக்கிரமசிங்க நேற்று தமது அலுவலகத்தில் கடமைகளைப் பொறுப்பேற்றார். பதவியேற்பைத் தொடர்ந்து அவர், இந்திய தூதுவர் கோபால் பாக்லே, அமெரிக்க தூதுவர் ஜூலி சங், ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் தூதுவர்களும் பிரதருடன் பேசினர். பிரிட்டன் தூதுவர் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பிரதமருடன் உரையாடினார். சீனத் தூதுவர் கீ சென்ஹொங் நேரில் சந்தித்து கலந்துரையாடினார்.

இந்தப் பேச்சுக்களின்

15

## இன்று 12 மணிநேர ஊரடங்கு தளர்வு!

கொழும்பு, மே 14

இன்று சனிக்கிழமை காலை 6 மணிக்கு தளர்த்தப்படும் ஊரடங்கு உத்தரவு மாலை 6 மணிக்கே நடைமுறைப்படுத்தப்படும் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

15

## மக்கள் பிரச்னைகளை ஆராய நான்கு குழுக்கள் நியமனம்!

கொழும்பு, மே 14

மக்கள் எதிர்கொள்ளும் பிரச்னைகளை ஆராய்ந்து யோசனைகளை முன்வைக்க பிரதமர் ரணில் விக்ரமசிங்க நான்கு குழுக்களை நியமித்துள்ளார்.

அத்தியாவசிய உணவுப்பொருட்களை தட்டுப்பாடின்றி விநியோகிப்பதற்காக வஜிர அபேவர்த்தன மற்றும் பாலித ரங்கே பண்டார ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மருந்து தட்டுப்பாடு தொடர்பில் ஆராய்வதற்காக

15

## மஹிந்த உள்ளிட்ட எழுவரை கைது செய்ய உத்தரவிடவும்!

### நீதிமன்றில் வழக்கு தாக்கல்

கொழும்பு, மே 14

கோட்டா கோ கம, மைனா கோ கம அமைதி போராட்டத்தில் அத்துமீறி தாக்குதல் நடத்தப்பட்டமை தொடர்பில் முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, பொலிஸ் மா அதிபர் உள்ளிட்ட 7 பேரை கைது செய்ய சி. ஐ. டி.க்கு உத்தரவிடுமாறு கோரி வழக்கு தாக்கல் செய்யப் பட்டுள்ளது.

கொழும்பு

15



## ரணிலின் அரசுடன் இணையமாட்டோம்

### சஜித் அணி அறிவிப்பு

கொழும்பு, மே. 14

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் கீழுள்ள அரசில் எந்தவொரு அமைச்சுப் பதவியையும் தாம் பொறுப்பேற்கத் தயாராக இல்லை என்று சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

இதன்படி தமது கட்சியில் உள்ள எந்தவொரு எம்.பியும் அமைச்சுப் பதவியைப் பெற்றுக் கொள்ளமாட்டார்கள் என்று ஐக்கிய மக்கள் சக்தி

15

## மின் கட்டணம் உயராவிடின் 23,000 கோடி ரூபாய் இழப்பு!

### பொது பயன்பாடுகள் ஆணைக்குழு

கொழும்பு, மே 14

இந்த வருடம் மின்சார கட்டணம் உயர்த்தப்பட வேண்டும். இல்லாவிடின் இலங்கை மின்சார சபைக்கு 23ஆயிரம் கோடி ரூபாய் இழப்பு ஏற்படும் என்று பொதுப் பயன்பாடுகள் ஆணைக் குழுவின் தலைவர் ஜானக ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

மின்சார கட்டணத்தை அதிகரிப்பது தொடர்பில் மின்சார சபை யோசனை திட்டமொன்றை முன்வைத்துள்ளது. இந்த முன்மொழிவு தற்போது ஆணைக் குழுவால் மதிப்

15

## ராஜபக்ஷக்களை காப்பது எனது நோக்கமே அல்ல!

### பிரதமர் ரணில் தெரிவிப்பு

கொழும்பு, மே 14

“முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட ராஜபக்ஷக்களைக் காப்பாற்றவே நான் பிரதமர் பதவியைப் பொறுப்பேற்றேன் என்று பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் கருத்துக்களை வெளியிடுகின்றனர். ராஜபக்ஷக்களைக் காப்பாற்றுவது எனது நோக்கம் அல்ல என்பதை குறித்த எம்.பிக்களிடம் கூறி வைக்க விரும்புகின்றேன்.”

- இவ்வாறு புதிய பிரதமர் ரணில் விக்கிரம

15

## ரணிலுக்கு கைகொடுக்க சுதந்திரக் கட்சி மறுப்பு!

கொழும்பு, மே. 14

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அரசில் எந்தவொரு பதவியையும் ஏற்காமல் இருப்பதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தீர்மானித்துள்ளது.

சுதந்திரக்கட்சியின் மத்திய செயற்குழு கூட்டம் அக்கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்று முற்பகல் கட்சி தலைமையகத்தில் கூடியது.

பிரதமராக பதவியேற்றுள்ள

15

## இப்படியும் நடக்கிறது...!

சமூக ஊடகங்களைத் திறந்தால், ரணில் பற்றிய கருத்துக்களையும் விமர்சனங்களையும் ஒவ்வொருவரும் தத்தமக்கு புரிந்தவிதமாக எழுதிக்கொண்டிருக்கின்றனர்.

அவை ஒவ்வொன்றும் அவரவர்களின் ஊகங்கள். ‘கோ ஹோம் கோட்டா’ அல்லது ‘கோட்டா கோ கம’ கிராமத்தை தொடரவேண்டும் என்று, பதவியேற்ற பின்னர் அவர் கேட்டிருப்பதாக வெளிவந்த செய்திதான் சமூக வலைத் தளங்களில் பெரிதும் பேசு பொருளாகியிருந்தது.

அதாவது, பார்த்தீர்களா, அவரும் கோட்டா வீட்டுக்குப் போகவேண்டும் என்றுதான் சொல்கிறார் என்றே இவர்கள் கூறிக்கொண்டிருந்ததை கவனிக்க முடிந்தது.

அவர் சொன்னதை புரிந்துகொள்ள பலரால் முடியவில்லையா என்பது தெரியவில்லை.

அவசரகாலச்சட்டம் கொண்டுவரப்பட்ட பின்னர், படையினருக்கு துப்பாக்கிச் சூடு நடாத்துவதற்கும் அனுமதி வழங்கியிருப்பாக அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், இந்த போராட்டக்காரர்களை அப்புறப்படுத்துவதற்கு இராணுவம் தனது ‘வல்லமை’யை பயன்படுத்தலாம் என்ற எதிர்பார்ப்பு பலருக்கும் இருந்தது. இந்த நிலையில், அவ்வாறு பலவந்தமாக அப்புறப்படுத்தக்கூடாது என்றே ரணில் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்திருந்தார். அதனையே பலரும் தத்தமக்குப் புரிந்த வகையில் பகிர்ந்துகொண்டிருந்ததை கவனிக்க முடிந்தது.

ரணில் பிரதமராக பதவியேற்ற பின்னர், தனது ருவிட்டர் பக்கத்தில் பதிவு ஒன்றை எமது கூட்டமைப்பின் பேச்சாளர் எம். ஆபிரகாம் சுமந்திரன் செய்திருந்தார்.

அது, நேற்றைய ‘ஈழநாடு’வில் செய்தியாகவும் வெளிவந்திருந்தது.

‘ஜனாதிபதி சட்டபூர்வ தன்மையை முற்றாக இழந்துவிட்டார். அவர் வீட்டுக்கு செல்லவேண்டும் என்றே மக்கள் விரும்புகிறார்கள். ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆரம்பத்திலிருந்தே பாராளுமன்றத்தில் சட்டபூர்வ தன்மை இல்லை. அவர் தனது தொகுதியில்கூட வெற்றி பெறவில்லை என்று சுமந்திரன் எம். பி. இந்தியாவின் ‘தி இந்து’ ஆங்கில நாளிதழுக்கு தெரிவித்துள்ளார்’ - இதுவே அந்தச் செய்தி.

‘பிரதமராக ரணில் நியமனம் - த. தே. கூட்டமைப்பு அதிருப்தி!’ என்ற தலைப்பில் வெளிவந்த அந்தச் செய்தியைப் படித்துவிட்டு நண்பர் ஒருவர் ‘வட்ஸ்அப்பில்’ தகவல் அனுப்பி னார். அது, சுமந்திரனின் தனிப்பட்ட கருத்து, அதனை எப்படி ‘கூட்டமைப்பு அதிருப்தி’ என்று தலைப்பிட்டிருக்கிறீர்கள், என்று கேட்டிருந்தார் நண்பர். அவரது தனிப்பட்ட ருவிட்டர் செய்தியையே இந்து நாளிதழ் செய்தியாக்கியிருக்கின்றது என்பது நண்பரின் வாதம்.

கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன், எப்போதும், சட்ட ரீதியான தர்க்கம் புரிகின்ற ஒருவர். முப்படையினருக்கும் தேவைப்பட்டால் துப்பாக்கிச் சூடு நடத்தலாம் என்று பாதுகாப்பு செயலாளர் உத்தரவிட்டிருப்பதாக செய்தி வெளிவந்த உடனேயே, ‘அமைச்சரவை கலைந்துவிட்ட பின்னர் அமைச்சுக்களின் செயலாளர்களும் பதவியிழந்து விடுவார்கள். எனவே, பாதுகாப்புச் செயலாளரும் இப்போது பதவி இழந்துவிட்டதால் அவர் சூடு நடாத்தவும் அனுமதித் தது சட்டவிரோதமானது’ என்று அறிக்கை விடுத்தார் சுமந்திரன். உடனே ஜனாதிபதி பாதுகாப்பு அமைச்சுக்கு மாத்திர மன்றி, மற்றும் மூன்று அமைச்சுக்களுக்கும் செயலாளர்களை நியமித்தார்.

சுமந்திரன் ஜனாதிபதிக்கு ஆலோசனை வழங்குவதற்காகவே அவ்வாறு அறிக்கை வெளியிட்டாரா என்பது தெரியவில்லை, அது வேறு விடயம்.

ஆனால், ரணில் பற்றிய சுமந்திரனின் மேற்கண்ட கருத்து வெளிவந்த நேற்றைய தினமே சுமந்திரன் தெரிவித்ததாக ‘லங்காதீப’ என்ற பிரபல சிங்கள நாளிதழில் வெளிவந்த செய்தி முற்றிலும் வேறாக இருந்தது.

லங்காதீப பத்திரிகையின் முதல் பக்கத்தில் வெளிவந்த செய்தி இதுதான்:

‘தற்போதைய நெருக்கடியான காலகட்டத்தில் நாட்டில் அரசு ஒன்று உடனடியாக நிறுவுவது அவசியமானது. அந்த வகையில் புதிய அரசுக்கு நாட்டின் தற்போதைய பிரச்னைகளை தீர்க்க தேவையான ஒத்துழைப்பு வழங்க தயார் என்று தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் ‘லங்காதீப’ நாளேட்டுக்கு தெரிவித்துள்ளார்.’

இதுதான் நேற்று வெளிவந்த லங்கா தீப பத்திரிகையில் வெளிவந்த செய்தி.

‘ஈழநாடு’வில் வெளிவந்த செய்தி, நேற்று முன்தினம் பகலில் அவர் சொன்னது. லங்கா தீபவில் வெளிவந்தசெய்தி அவர் நேற்று முன்தினம் இரவு சொன்னதாகவும் இருக்க லாம். லங்காதீப நேற்றைய பத்திரிகையில் வெளியிடுகின்றது என்றால் அது அச்சுக்குப் போவதற்கு முதல் எந்த நேரத்திலும் சொன்னதாக இருக்கலாம்.

அப்படியெனில் சுமந்திரன் பகலில் சொன்னதற்கும் இரவு சொன்னதற்கும் ஏன் இந்த முரண்பாடு என்பது தெரியவில்லை.

ஆனால், ஒரே நாளில் வெளிந்த தமிழ் பத்திரிகையில், ‘பிரதமராக ரணில் நியமனம் - த. தே. கூட்டமைப்பு அதிருப்தி’ என்பது தலைப்பு.

அதேநாளில் வெளிவந்த சிங்கள பத்திரிகையில், ‘புதிய அரசாங்கத்துக்கு தமிழ் கூட்டமைப்பு உச்ச ஆதரவு’ என்பது தலைப்பு.

இந்த சூத்திரம் அவருக்கு மாத்திரமே தெரிந்தது!

- ஊர்க்குருவி

# போரின் வலி சுமந்தோர் வாழ்வில் ஒளியேற்றுவோம்!

## ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பு

முல்லைத்தீவு, மே 14

முள்ளிவாய்க்கால் இன வழிப்பை நெஞ்சில் நிறுத்தி நினைவேந்துவோம். வலி சுமந்தோர் வாழ்வில் ஒளியேற்றுவோம் என்று ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பு தெரிவித்துள்ளது.

ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பின் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரம் தொடர்பாக விடுத்திருக்கும் அறிக்கையிலேயே மேற்படி விடயம் தெரிவிக்கப்பட்டது.

மேலும், “மரபுவழியான தமிழர் தாயகப் பிரதேசங்களில் எமது வாழ்வியல், வரலாறு மற்றும் பண்பாடுகள்மீதான புற வல்லாதிக்கத்தை நாம் பல தசாப்தங்களாக அனுபவித்து வந்திருக்கின்றோம்.

இந்த நிலையில் உலக ஒழுங்கியலுக்கு ஏற்றவாறான, நியாயமான எமது சுயநிர்ணய உரிமைக்கான போராட்டத்தை பல்வேறு தளங்களில், வடிவங்களில் முன்னகர்த்தி ஈழத் தமிழர்களாகிய நாம் இன்றுவரை போராடிய வண்ணம் இருக்கின்றோம். எமது தீர்க்கமான, நியாயமான போராட்ட இலக்குகளை சர்வதேசமும், அதன் பல்தேசிய அமைப்புக் கள் பலவும் அங்கீகரித்து வந்திருக்கின்றன, வருகின்றன.

எனினும், உலகின் சில சர்வதேச, பிராந்திய வல்லரசுகள் பேரினவாத அரசுடன் கரங்கோர்த்து, தத்தமது சுய அரசியல் இலாபங்களுக்காக, உலக நீதியின் ஒழுக்கிற்கு வெளியே நின்று எமது ஆயுதப்போரை இரும்புக் கரங்கொண்டு நசுக்கி மௌனிக்கச் செய்தமை உலகறிந்த உண்மை. “சமாதானத் துக்கான போர்” என்ற பெயரில் ஒரு மிலேச்சத் தனம் அரங்கேறி தாண்டவமா டியது.

2009இன் இதேபோன்றதொரு வாரத்தில் முடித்து வைக்கப்பட்ட இக்கோரத்தனத்துக்கு இரையாக, எமது இனத்தின் ஒரு பகுதியினர் கொத்துக் கொத்தாக கொன்றழிக்கப்பட்டனர். தாய் தந்தையரை, கணவனை, மனைவியை, பிள்ளைகளை பலிகொடுத்த பல்லாயிரம் குடும்பங்கள் உள்ளன. அங்கங்கங்களை இழந்து ஆயிரமாயிரம்பேர் நிர்க்கதியாக்கப்பட்டனர்.

இனவழிப்பு நிலத்தின் பட்டினியும், பயமும், உளவியல் தாக்கமும் தமிழினத்தின் அடுத்த சந்ததியின் அத்திவாரக் கற்களையும் அசைத்துச் சென்ற கொடூரத்தை, மிகப்பெரிய மனித அவலத்தை இன்றுவரை சர்வதேசம் மறந்திருக்க வாய்ப்பில்லை.

ஆசாபாசங்களைத் துறந்து எமக்காகவும், எமது சந்ததிக்காகவும், எமது உரிமைக்காகவும், எமது சுய கௌரவத்திற்காகவும் இந்த தாங்கவொண்ணா வலிகளைச் சுமந்தவர் எங்கள் கண்முன்னே கரமிழந்து நிற்கின்றனர். எமது மக்கள் பட்டினியின் வாயில் படாதபாடு படுகின்றனர். எமது சமுதாயத்தின் இந்த இருள் நிலையை நாம் இலகுவில் கடந்துசென்றுவிட முடியாது. கண்முன்னே பற்றி எரிந்துகொண்டிருக்கும் அவர்களின் அரும்பொட்டான வாழ்வை கண்டும் காணாது இருந்துவிட முடியாது. எனவே எமது மக்களின் வாழ்வாதாரங்களை கட்டமைப்பது எமது அவசரமும் அவசியமுமான காலக்கடமையாகும். எமது இனத்தின் போர்க்கால வடுக்களை ஆற்றும் மூலத் தேவைகளில் ஒன்றான இக்கைங்கரியத்தை ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பாகிய நாம் இயலுமானவரை செய்ய விளைகின்றோம். இந்த மனிதாபிமானம் மிக்க பணியில் இணைந்துகொள்ள அர்ப்பணிப்புள்ள யாவரையும் இரு கரம் நீட்டி அழைக்கின்றோம்.

எமது மனித உரிமையின் மீது விழுந்த மிகப்பெரிய காயத்தை உலகம் மெல்ல மெல்ல மறந்து சென்றாலும் நாம் அதனை மறந்துவிட முடியாது. அந்தத் தழும்பின் அத்தனை வேதனைகளையும் அடுத்த சந்ததிக்கு கற்பிதங்களாக உணர்த்துதல் எமது வரலாற்றுக் கடமையாகும். அதுமட்டுமன்றி எமது வரலாற்றுத் துயரங்களை அடையாளப்படுத்தி அனுட்டித்தல் எமது மனித உரிமையுமாகும்.

எனவே எமது மக்களின் உயிர்களின் கொதிநிலையை அடையாளப்படுத்தும் இந்தப் புனிதமான முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தில் எமது பண்பாட்டின் வழியே ஆலயங்களிலும் வீடுகளிலும் விளக்கேற்றி, அந்த அழிக்கப்பட்ட ஆத்மாக்களை ஒரு கணம் நினைவதோடு அன்று எம்மவர் அனுபவித்த பசிப்பிணியை எடுத்து இயம்பும் முள்ளிவாய்க்கால் கஞ்சியை காய்ச்சி அனைவருக்கும் வழங்கி ஒரு நாளேனும் ஒரு பொழுதேனும் அதனை மட்டும் உணவாகக் கொள்வோம்.

அதே நேரம் போரின் கோர வடுக்களை சுமந்து நலிவுற்ற எம் மக்களுக்கு எம்மாலான அறப்பணியை நாமும் செய்து அனைவரையும் தூண்ட இந்த நினைவழியா நாட்களான முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தில் உறுதியேற்க வேண்டி நிற்கின்றோம் - என்றுள்ளது. (ஐ)

## புத்தளத்தில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் மரணம்!

கொழும்பு, மே 14

புத்தளம் - அநுராதபுரம் பிரதான வீதியின் சாலியாவெவ பகுதியில் நேற்று முன் தினம் இடம்பெற்ற வீதி விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

புத்தளம் - தம்பபண்ணி பகுதியை சேர்ந்த எம்.யூ.எம். சர்ஜூன் (வயது 38) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

புத்தகத்தில் இருந்து தம் புள்ளை நோக்கிப் பயணம் செய்த கப் வாகனமும், புத்தளத்தில் இருந்து ராஜாங்கனை பகுதிக்கு வாடகைக்கு சென்றுவிட்டு மீண்டும் புத்தளம் நோக்கி பயணித்த முச்சக்கர வண்டி ஒன்றும் மோதியதில் இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகவும் சாலியாவெவ பொலிஸார் குறிப்பிட்டனர்.

இந்த விபத்தில் காயமடைந்த முச்சக்கர வண்டி சாரதியை அங்கிருந்தவர்கள் உடனடியாக புத்தளம் தள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போதிலும், அவர் அங்கு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் எனவும் பொலிஸார் கூறினர். (அ)

## மருந்தகம், மருத்துவமனைகளை ஊரடங்கு நேரத்திலும் திறக்கலாம்!

கொழும்பு, மே 14

ஊரடங்கு நடைமுறையில் உள்ள காலத்தில் மருந்தகங்களை திறக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கடந்த நாட்களில் முழுநேர ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்பட்டு தற்போது காலை 6.00 மணிக்கு தளர்த்தப்பட்டு பி.பகல் 2.00 மணிக்கு மீண்டும் அமுல்படுத்தப்பட்டு வருகிறது.

இவ்வாறு ஊரடங்கு நடைமுறையில் இருக்கும் காலத்தில் அரச மற்றும் தனியார் மருந்தகங்கள் மற்றும் மருத்துவமனைகளை திறக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (ஐ)

## முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கல் புதுக்குடியிருப்பிலும் தொடங்கியது

முல்லைத்தீவு, மே 14

“கஞ்சி பரிமாறுவோம் முள்ளிவாய்க்கால் வலி சுமந்த கதை பகிர்வோம்” என்ற தொனிப்பொருளில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் செயல்பாடு நேற்று புதுக்குடியிருப்பு நகரத்திலும் இடம்பெற்றது.

முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை வாரத்தின், இரண்டாவது நாளான நேற்று, வடக்கு, கிழக்கு வலிந்து காணமால் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் சங்கத்தின் ஏற்பாட்டிலும் பொது அமைப்புகளும் இணைந்து இந்தத் திட்டத்தை முன்னெடுத்தனர்.

புலனாய்வாளர்களின் கெடுபிடிகளுக்கு மத்தியில் புதுக்குடியிருப்பு நகரப் பகுதியில் கஞ்சி வழங்கு செயல்பாட்டை காணாமல் ஆக்கபட்டவர்களின் உறவினர்கள் மற்றும் பொது அமைப்பினர் இணைந்து நேற்று முன்னெடுத்தனர். (ஐ)

ஈழநாடு
Eelanadu
14.05.2022 சனிக்கிழமை
பிலவ வருடம், சித்திரை 31

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# ரணில்?

ரணில் விக்கிரமசிங்க, நாட்டின் ஆறாவது பிரதமராகக் கடமைகளை பொறுப்பேற்றிருக்கின்றார். இது பலரும் எதிர்பாராத ஓர் அரசியல் நகர்வு. ரணில் விக்கிரமசிங்கவின் கெட்டித்தனம் தொடர்பில் எவருக்கும் சந்தேகமில்லை. ஆனால், இவ்வாறானதொரு நெருக்கடியான தருணத்தில், இப்படியானதொரு நகர்வு இடம்பெறும் என்பதை எவருமே எதிர்பார்த்திருக்கவில்லை. கடந்த பொதுத் தேர்தலில் ரணில் படுமோசமான தோல்வியை சந்தித்தார்.

அவரின் தலைமையிலான பாரம்பரிய அரசியல் கட்சியான, ஐக்கிய தேசியக் கட்சி, ஒரு தேசிய பட்டியல் ஆசனத்தை மட்டுமே பெற்றிருந்தது. ருக்கிய தேசியக் கட்சியின் பின்னடைவுக்கு சஜித் பிரேமதாஸவே பிரதான காரணம். ஜனாதிபதி தேர்தலின்போது, சஜித் பிரேமதாஸ ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து வெளியேறி, ஐக்கிய மக்கள் சக்தியை உருவாக்கியிருந்தார். அவருடன் ஐக்கிய தேசியக் கட்சியின் பெரும்பாலானவர்கள் வெளியேறியிருந்தனர்.

ரணில் விக்கிரமசிங்கவும் அவருக்கு நெருக்கமான சிலரும் மட்டுமே ஜக்கிய தேசியக் கட்சியாக எஞ்சியிருந்தனர். ரணில் தனித்து விடப்பட்டார். ஆனாலும் தனது இறுக்கமான நிலைப்பாட்டிலிருந்து அவர் விலகவில்லை. ஒரு வருடகாலம் அமைதியாக இருந்த ரணில் விக்கிரமசிங்க, திடீரென்று, ஐக்கிய தேசியக் கட்சியிடமிருந்த ஒரேயொரு, தேசிய பட்டியல் ஆசனத்தின் மூலம் பாராளுமன்றத்திற்குள் பிரவேசித்தார். அவர் பாராளுமன்றம் பிரவேசித்த போது, 'ஈழநாடு', ரணில் குறைத்து மதிப்பிடக் கூடிய ஒருவரல்ல - என்று குறிப்பிட்டிருந்ததை, வாசகர்கள் ஒருவேளை மறந்திருக்கலாம். ரணில் தருணம் பார்த்து காய்நகர்த்தும் ஒரு சாணக்கியன் என்பதையும் நாம் குறிப்பிட்டிருந்தோம். இப்போது அது நடந்திருக்கின்றது.

சொந்த தொகுதியில் தோல்வியடைந்த, ஒரு தேசிய பட்டியல் பாராளுமன்ற ஆசனத்தை மட்டுமே வைத்திருந்த, ரணில் விக்கிரமசிங்க, நாட்டின் பிரதமராக வந்திருக்கின்றார். இது நிச்சயமாக, ரணிலால் மட்டுமே இயலக்கூடிய ஒன்றுதான் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை.

மஹிந்த ராஜபக்ஷவின் அவமானகரமான வீழ்ச்சியை தொடர்ந்து, ராஜபக்ஷ குடும்பம் பெரும் அரசியல் நெருக்கடிக்குள் சிக்கியிருக்கின்றது. இப்போது ராஜபக்ஷ குடும்பத்தின் முதல் தெரிவு அவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்திக்கொள்வது மட்டுமே. இப்போது கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருப்பது மட்டும்தான், ராஜபக்ஷக்களின் ஒரேயொரு பலம். ராஜபக்ஷ குடும்பம் முற்றிலுமாக அரசியல் அநாதைகளாக்கப்பட்டிருக்கும் சூழலில், அரசாங்கத்தை முன்கொண்டு செல்வது எவ்வாறு?

இதற்கான பதிலாகவே ரணில் களத்தில் பிரவேசித்திருக்கின்றார். ரணிலுக்கும் ராஜபக்ஷ தரப்புக்கும் எவ்வாறான 'டீல்'கள் இருக்கின்றன என்பதற்கு அப்பால், இன்றைய சூழலை ஓரளவு கையாளக் கூடிய ஒருவர் என்றால் - அது ரணில் விக்கிரமசிங்க மட்டும்தான் - என்னும் அபிப்பிராயம் படித்த சிங்களவர்களுக்குள் மட்டுமல்ல தமிழ் மக்கள் மத்தியிலுமுண்டு. இந்த அபிப்பிராயம்தான் ரணிலின் பலம்.

ரணில் விக்கிரமசிங்க, மேற்குலக ஆதரவை பெற்றவர் என்பது இரகசியமான ஒன்றல்ல. அவர் பதவியேற்றதும் முதலில், அதனை வரவேற்றவர் அமெரிக்க தூதுவர்தான். இன்றுள்ள சிங்கள அரசியல் தலைவர்களுக்குள், ரணிலளவிற்கு, சர்வதேச முகமுள்ள வேறு எவரும் இல்லை. நாட்டுக்கு இப்போது தேவையானது, பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கான உதவிகள்தான். இதனை செய்வதே ரணிலுக்கு முன்னாலுள்ள ஒரேயொரு பணியாகும். இதனை சரிவரச், செய்தால், ரணில் மீண்டும் கொழும்பின் அரசியலில் தவிர்க்க முடியாத ஒருவராக வந்துவிடுவார்.

கோட்டாபய ராஜபக்ஷ அவரின் பதவியில் தொடர்ந்தாலும்கூட, அவரால் எதனையும் செய்ய முடியாது. இந்த நிலையில் அவர் முற்றிலும் ரணில் விக்கிரமசிங்கவுடன் ஒத்துழைப்பதைத் தவிர, அவருக்கு முன்னால் வேறு தெரிவுகள் இல்லை. ரணில் பிரதமராக வந்திருப்பதன் மூலம், இலங்கையின் அரசியல் வரலாற்றில் ஓர் அதிசயமான ஆளுமையென்னும் நிலையை அவர் பெற்றிருக்ககின்றார்.

# பிரதமர் ரணில் விக்கிரமசிங்க!

அலசுவது இராஜதந்திரி



"அரசியலில் நிரந்தர எதிரிகளும் இல்லை. நிரந்தர நண்பர்களும் இல்லை." என்று கூறப் படுவதுண்டு. இதனை நிரூபிப்பதாகவே இலங்கை அரசியலில் அண்மைக்காலங்களில் இடம்பெற்று வருகின்ற நிகழ்வுகள் எடுத்துக் காட்டுகின்றன.

ஐக்கிய தேசிய கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கேட்டுக்கொண்டதன் பேரில் பிரதமராகப் பதவியேற்றுள்ளார். ரணில் விக்கிரமசிங்கவை பிரதமராக்கும்படி முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு சிபாரிசு செய்திருந்தார்.

இதன்மூலம், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கத்தில், பிரதமர் பதவிக்கு தகுதியான ஒருவர் இல்லை என்பது நிரூபணமாகியுள்ளது. அத்துடன், ரணில் விக்கிரமசிங்கவுக்கு வழங்கப்பட்டுள்ள பிரதமர் பதவி என்பது தற்போதைய நெருக்கடியான காலகட்டத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தாம் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் எதிர் கொண்டுள்ள பலதரப்பட்ட சவால்களையும் சந்திக்கும் விதத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றே கருத முடியும்.

உள்நாட்டைப் பொறுத்தவரை பொருளாதார நிலைமை என்றுமில்லாதவாறு சீரழிந்துள்ளது. இதன்காரணமாக நாட்டு மக்கள் கொதித்தெழுந்த நிலையில் காணப்படுகின்றனர்.

கடந்த காலங்களில் இன, மத, மற்றும் அரசியல் ரீதியான கலவரங்கள் நாட்டில் ஏற்பட்டிருந்தன. ஆனால், முதல் தடவையாக பொருளாதார நெருக்கடி காரணமாக நாட்டு மக்கள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்துள்ளதையே கடந்த சில தினங்களுக்கு முன்பாக இடம்பெற்ற சம்பவங்கள் எடுத்துக்காட்டியிருந்தன.

இத்தகைய பின்னணியில் நாட்டில் அரசியல் மற்றும் பொருளாதார நிலைமை களைச் சமாளித்து சர்வதேச உதவிகளைப் பெற்றுக் கொள்ளவே ரணில் விக்கிரமசிங் கவை பிரதமராக்கும் நிலைக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நிர்ப்பந்திக்கப்பட் டுள்ளார்.

இதன்மூலம் ஜனாதிபதியின் கையாலாகாத்தனமும், தற்போதைய இலங்கை நிலவரம் தொடர்பான அரசியல் நடவடிக்கைகளையும் பொருளாதார நடவடிக்கைகளையும் கையாளக்கூடிய ஒருவர் அவரது தரப்பில் இல்லை என்பதையும் ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே, ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பிரதமராக்கியுள்ளார் என்று குறிப்பிடுவதைவிட, ஜனாதிபதி ராஜபக்ஷ ரணில் விக்கிரமசிங்கவை தமக்கொரு கேடயமாக்கப் பயன்படுத்தவே அவருக்கு பிரதமர் பதவியை வழங்கியுள்ளார் என்றே குறிப்பிடமுடியும்.

அத்துடன், தம்மை ஜனாதிபதி பதவிக்குக் கொண்டுவந்த தமது சகோதரரான முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நாட்டு மக்களின் விசுவாசத்தை இழந்துள்ளதை அறிந்துள்ள ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, எதிர்காலத்தில் சர்வதேச உதவிகளைப் பெறுவதற்கு அரசியலில் உள்ள தமது குடும்பத்தவர்கள் எவரும் தகுதியுடையவர்களல்ல என்பதையும் அறிந்துள்ளார்.

மறுபுறத்தே பார்க்கும்போது ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் கையாலாகாத் தன்மைகளுக்கு ரணில் விக்கிரமசிங்க பிரதமர் பதவியைப் பெற்றுக்கொண்டதன் மூலம் ஒரு பலிக்கடாவாகியுள்ளார் என்றே குறிப்பிட முடியும்.


பிரதமராகியுள்ள ரணில் விக்கிரமசிங்க கடந்த காலங்களில் ஜனாதிபதி பதவிக்கு போட்டியிட்டு தோல்வியைத் தழுவியவர். அவரோடு ஐக்கிய தேசிய கட்சியில் ஜே. ஆர். ஜெயவர்த்தனவின் காலத்தில் அரசியல் பிரவேசம் செய்த காமினி திஸநாயக்க, லலித் அத்துலத் முதலி ஆகியோர் அரசியலில் ஆளுமை கொண்டவர்களாக இருந்தனர். அவர்களின் அகால மரணங்களே ஐக்கிய தேசிய கட்சியை அரசியலில் ஓர் அநாதரவான நிலைக்கு கொண்டு சென்றிருந்தது.

தற்போதைய பிரதமராகப் பதவியேற்றுள்ள ரணில் விக்கிரமசிங்க நாட்டு நலன் கருதியே தாம் பிரதமர் பதவியை ஏற்றுக் கொள்ள உடன்பட்டுக் கொண்டதாக தெரிவித்துள்ளார். ஆனால், நாட்டு நலனைவிட ஜனாதிபதி ராஜபக்ஷ, மற்றும் பிரதமர் ராஜபக்ஷ ஆகியோரின் நலன்களைப் பாதுகாக்கவே பிரதமராக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றுள்ளார் என்றே கருத முடியும்.

பிரதமராக ரணில் விக்கிரமசிங்கவை பதவியிலமர்த்தியதன் மூலம் இலங்கைக்கு பொருளாதார ரீதியான உதவிகளை சர்வதேச நாணய நிறுவனம் மற்றும் உலக வங்கி ஆகியவற்றிடமும், மேற்கத்தேய சமூகத்திட மும் ஜனாதிபதி ராஜபக்ஷ எதிர்பார்க்க முடியுமெனவும் கருத முடியும். அத்துடன், ரணில் விக்கிரமசிங்கவை பிரதமராக்கும்படி சர்வதேச சமூகத்திடமிருந்துகூட ஜனாதிபதி ராஜபக்ஷவுக்கு அழுத்தம் ஏற்பட்டிருக்கவும் முடியும்.

இந்நிலையில், ஜனாதிபதி ராஜபக்ஷவுக்கு எதிராக போர்க்கொடி ஏந்திய அவரது சகோதரரான முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவைக்கூட திருகோணமலைவரை பின்வாங்கச்செய்வதில் வெற்றி கண்டதோடு தற்காலிக கற்பனைக் கிராமங்களான கோட்டா கோ கம மற்றும் மைனா கோ கம என்பவற்றை உருவாக்கிய மக்கள் ரணில் விக்கிரமசிங்க பிரதமராகியிருப்பதை எத்தகைய கோணத்தில் ஏற்றுக்கொள்வார்கள் என்பதை பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



மே - 14 சனிக்கிழமை
சுபகிருது வருடம் - சித்திரை 31
நல்ல நேரம் : 07.30 - 09.00
ராகு காலம் : 09.00 - 10.30
திதி : திதித்துவயம்




**மேடம்**
புதிய நண்பர்கள் உதவியால் மாற்றம் ஏற்படும் நாள். எதிர்பார்த்த வரவால் குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டாகும். உத்தியோகத்தில் இருந்து வந்த பிரச்னை விலகும்.

**இடபம்**
சுப நிகழ்ச்சிகளில் குடும்பத்துடன் பங்கேற்பீர். நண்பரின் உதவியால் பிரச்னையிலிருந்து விடுபடுவீர்கள். நிம்மதியான நாள். பணியிடத்தில் நெளிவு, சுளிவுகளை கற்றுக் கொள்வீர்கள்.

**மிதுனம்**
அரசு வழியில் சில சிக்கல் தோன்றி மறையும். பரபரப்பான நாள். நீங்கள் விழிப்புடன் இருக்க வேண்டிய நாள். முயற்சியில் கவனம் தேவை. எதிர்பார்த்த தகவல் வந்து சேரும்.

**கடகம்**
தடைபட்டிருந்த செயலில் முயன்று வெற்றி காண்பீர்கள். தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் மேலோங்கும். தைரியமாக செயல்பட்டு நீங்கள் நினைத்ததை சாதிப்பீர்கள்.

**சிம்மம்**
வியாபாரத்தில் லாபம் காண வேண்டிய நாள். பேச்சில் நிதானம் தேவை. எதிர்பார்த்த இடத்தி லிருந்து நல்ல செய்தி வரும். எதிலும் யோசித்து செயல்பட வேண்டிய நாள். நண்பர்கள் ஒத்துழைப்பார்கள்.

**கன்னி**
உங்கள் வேலைகளில் தீவிரமாக கவனம் செலுத்த வேண்டிய நாள். உங்களது செயலின் முடிவினை தள்ளி வைப்பது நல்லது. பழைய பிரச்னை மீண்டும் தலைதூக்காமல் பார்த்துக்கொள்ளுங்கள்.

**துலாம்**
திடீர் பயணத்தால் அதிக செலவு உண்டாகும். மனதை அலைபாய விடுவதால் சங்கடம் தோனறும். கொடுக்கல் வாங்கலில் கவனம் தேவைப்படும் நாள்.

**விருட்சிகம்**
தொட்டதெல்லாம் வெற்றியாகும் நாள். உங்கள் செல்வாக்கு உயரும். பிரிந்து சென்ற உறவினர் ஒருவர் உங்களைத்தேடி வருவார். தொழிலில் லாபம் வரும் வழிகளைக் கண்டறிந்து செயல்படுவீர்கள்.

**தனுசு**
தொழிலை விரிவு செய்யும் முயற்சி வெற்றியாகும் நாள். வியாபாரத்தில் எதிர்பார்த்திருந்த வகையில் லாபம் காண்பீர்கள். நீண்டநாள் முயற்சி ஒன்று நிறைவேறும். மகிழ்ச்சி உண்டாகும்.

**மகரம்**
தந்தை வழியில் ஆதாயம் காண்பீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டாகும். வாழ்க்கைத் துணையின் உடல்நிலையில் கவனம் தேவை. அலைச்சல் அதிகரித்தாலும் அதனால் லாபம் ஏற்படும்.

**கும்பம்**
எதிரிகளின் கை மேலோங்கும். விழிப்புணர்வு தேவைப்படும் நாள். உங்கள் வேலைகளை வேறு நபர்களை நம்பி ஒப்படைக்க வேண்டாம். உங்கள் செயல்களில் இழுபறி தோன்றும்.

**மீனம்**
பணியிடத்திலிருந்த இட மாறுதல், ஊர் மாறுதல் குறித்த தகவல் வரும். நட்புகளின் வழியே சில பிரச்னைகளுக்கு முடிவு காண்பீர்கள். தொழில், உத்தியோகம் வகையில் உங்கள் எண்ணம் நிறைவேறும்.

# இலங்கை மக்களுக்கு பொருட்கள் அனுப்பும் நடவடிக்கைகள் தீவிரம்!

சென்னை, மே 14

இலங்கை மக்களுக்கு உதவ முதல்வர் அறிவித்த நிவாரணப் பொருட்களை அனுப்புவதற்கான நடவடிக்கை தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கையில் பொருளாதார நெருக்கடி காரணமாக மக்கள் பெரும் துன்பங்களை சந்தித்தனர். இதனால், அங்கு கலவர சூழல் ஏற்பட்டது. இந்நிலை யில், இலங்கைக்கு உதவ 80 கோடி இந்திய ரூபாய் மதிப் புள்ள நான்கு கோடி கிலோ அரிசி, 28 கோடி இந்திய ரூபாய் மதிப்புள்ள 137 உயிர் காக்கும் மருந்து பொருட்கள், 15 கோடி ரூபாய் மதிப்புள்ள ஐந்து இலட்சம் தொன் பால் பவுடர் ஆகியவை முதல் கட் டமாக அனுப்பப்படவுள்ளன.

இதன்படி நிவாரணப் பொருட்களை அனுப்புவதற்கான நடவடிக்கைகளை தமிழக அரசாங்கம் தொடக்கியுள்ளது. இதற்காக 4 மாவட்ட ஆணையர்கள் அடங்கிய குழு நியமிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் மஸ்தான் கூறுகை யில் "தூத்துக்குடியில் இருந்து




பொருட்கள் அனுப்பப்பட உள்ளன. இந்த மாதம் இறுதிக்குள் இலங்கைக்கு பொருட்கள் அனுப்பப்படும்" - என்றார்.

நிவாரணப் பொருட்கள் அடங்கிய பைகள் மீது மத்திய அரசு மற்றும் தமிழக அரசு சின்னம் பொறிக்கப்பட்டுள் ளது. "தமிழ்நாட்டு மக்களிட மிருந்து அன்புடன் ஸ்டாலின், தமிழக முதல்வர்" என்ற வாசகமும் அச்சிடப்பட்டுள் ளது. (ஐ)

# ஈழத்தமிழர்களை பல ஆண்டுகால துன்பங்களிலிருந்து விடுவிப்போம்!

## ஸ்டாலின் உறுதி என்கிறார் வைகோ!



சென்னை, மே 14

ஈழத் தமிழர்களை இத்தனை ஆண்டுகாலமும் வாட்டி வதைக்கும் துன்பத்திலிருந்து விடுவிக்க மத்திய அரசுடன் பேசி நடவடிக்கை எடுப்போம் என்று முதல்வர் ஸ்டாலின் உறுதியளித்துள்ளார் என்று ம. தி. மு. க. பொதுச் செயலாளர் வைகோ கூறியுள்ளார்.

அத்துடன், இலங்கையில் வசிக்கும் ஈழத்தமிழர்களின் துயரை துடைப்பதற்கு தமிழக அரசாங்கம் எடுத்துள்ள முயற்சிகள் பாராட்டுக்குரியது என்றும் அவர் சொன்னார்.

தமிழக முதல்வர் மு. க. ஸ்டாலினை, வைகோ, திருமாவளவன், வேல்முருகன், ஜவாஹிருல்லா, சுப.வீரபாண்டியன் ஆகியோர் நேற்று சந்தித்தனர். இந்த சந்திப்பின்போது, இலங்கையின் தற்போதைய சூழல் குறித்து ஆலோசிக்கப்பட்டது.

இதன்பின்னர் வைகோ செய்தியாளர்களை சந்தித்தபோதே மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், "ஈழத்தில் இருக்கக்கூடிய தமிழர்களுக்கு, மலையக தமிழர்களுக்கு, பூர்வீக தமிழர்களுக்கு மற்றும் அங்கு வாழக்கூடிய தமிழர்களுக்கு, தமிழகத்தில் இருந்து அவர்களின் கண்ணீரைத் துடைப்பதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று தமிழக முதல்வர் மு. க. ஸ்டாலின் மனிதநேய நோக்கத்துடன் முடிவெடுத்துள்ளார். உடனடியாக பசிபட்டினியிலிருந்து அவர்களை விடுவிக்க வேண்டும் என்பதை அவர் உணர்ந்திருக்கிறார்.

இந்த நோக்கத்தில் 134 கோடி (இந்திய) ரூபாய் மதிப்பிலான 40 ஆயிரம் தொன் உயர்தர அரிசி அனுப்புவதற்கும், 15 கோடி (இந்திய) ரூபாய் மதிப்பில் 500 தொன் பால்பவுடர் அனுப்புவதற்கும், அதுபோல 28 (இந்திய) ரூபாய் கோடி மதிப்பில், 137 வகையான மருந்துகளை அனுப்புவதற்கும், மொத்தம் 177 (இந்திய) ரூபாய் கோடி மதிப்பிலான பொருட்களை அனுப்புவதற்கும் முதல்வர் ஏற்பாடு செய்திருக்கின்றார்.

அதற்கான முயற்சியிலே ஈடுபட்டு, மத்திய அரசு அதற்கு எந்தவிதமான முட்டுக்கட்டையும் போடாமல், அதை அனுப்புவதற்கு என்ன செய்ய வேண்டுமோ அதை செய்து கொண்டிருக்கின்றார். இந்த பொருட்கள் எல்லாம் அங்கு சென்று சேர்ந்து அவர்களுடைய துன்பம் தணிவிக்கப்படுகின்ற வேளையில், அடுத்து படிப்படியாக ஈழத் தமிழர்களுக்கு ஏற்பட்டிருக்கின்ற துயரத்தை போக்குவதற்கு, அவர்களை இத்தனை ஆண்டுகாலமும் வாட்டி வதைத்த துன்பத்திலிருந்து படிப்படியாக அவர்களை விடுவிக்க என்ன செய்ய வேண்டுமோ அதை செய்வோம். மத்திய அரசிடம் இதுதொடர்பாக பேசுவோம் என்று தமிழக முதல்வர் எங்களிடம் வாக்குறுதி கொடுத்தார் - என்றார்.

(ஐ)

## இலங்கைக்கு நிவாரண திட்டம்

# தி. மு. க.வினரின் ஒருமாத ஊதியம் முதல்வர் ஸ்டாலினிடம் அன்பளிப்பு

சென்னை, மே 14

தமிழகத்தை ஆளும் தி. மு. க. சட்டமன்ற உறுப்பினர்களின் ஒரு மாத ஊதியமான ஒரு கோடியே 30 இலட்சம் இந்திய ரூபாயை - நம் நாட்டு மதிப்பில் சுமார் 4 கோடியே 80 இலட்சம் ரூபாயை பிரதம கொறடாவானா கோவி செழியன் நேற்று முதல்வர் ஸ்டாலினிடம் வழங்கினார்.

பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் இலங்கைக்கு உதவ தமிழக அரசாங்கம் நிவாரண திட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளது. இந்த நிவாரணத் திட்டத்துக்கு தமிழ்நாட்டின் பல்வேறு அரசியல் கட்சிகள், தனவந்தர்கள், மக்கள் எனப் பலரும் உதவிகளை வழங்கி வருகின்றனர்.

இந்நிலையில், தி. மு. க. கட்சி சார்பில் ஒரு கோடி இந்திய ரூபாய் அளிக்கப்பட்டது. இந்நிலையில், தி. மு. க. சட்டமன்ற, பாராளுமன்ற உறுப்பினர்களின் ஒரு மாத ஊதியம் நிவாரண நிதிக்கு வழங்கப்படும் என்று




அறிவிக்கப்பட்டிருந்தது

இதன்படி, ஒரு கோடியே 30 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய்க்கான காசோலையை தமிழக அரசின் தலைமைக் கொறடா கோவி.செழியன், சென்னை தலைமைச் செயலகத்தில் வைத்து முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் வழங்கினார். (ஐ)

# ரணிலுக்கு ஆதரவு திரட்டும் கோட்டா

## மொட்டு கட்சியுடன் இன்று சந்திப்பு

கொழும்பு, மே. 14

**ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும், ஜனாதிபதிக்கும் இடையிலான சந்திப்பொன்று இன்று முற்பகல் ஜனாதிபதி மாளிகையில் நடைபெறவுள்ளது.**

பிரதமராக மஹிந்த ராஜபக்ஷ பதவி விலகிய பின்னர், பொதுஜன பெரமுனவின் அரசும் கலைந்தது. இந்நிலையில் புதிய அரசை ஸ்தாபிப்பதற்கு ஜனாதிபதி நடவடிக்கை எடுத்து வருகின்றார்.

இந்நிலையிலேயே மொட்டு கட்சி எம்.பிக்களை சந்தித்து, ஆலோசனை நடத்தவுள்ளார்.

இதற்கிடையில் விமல் வீரவன்ச, உதய கம்மன்பில உட்பட 10 கட்சிகளின் பிரதிநிதிகள், ரணிலுக்கு ஆதரவு வழங்கக்கூடும் என அறியமுடிகின்றது.

ஐக்கிய தேசியக்கட்சியின் உறுப்பினர்கள் மூவர் பாராளுமன்றம் வருவதற்காக, மொட்டு கட்சியின் தேசிய பட்டியல் எம்.பிக்கள் மூவர், தமது பதவியை துறக்க தயாராக உள்ளனர் என தகவல் வெளியாகியுள்ளது. (அ)

# ரணில் அரசுடன் இணைந்து பணியாற்றுவதற்குத் தயார்!

## இந்திய அரசு அறிவிப்பு

கொழும்பு, மே. 14

ரணில் விக்ரமசிங்க தலைமையிலான புதிய அரசாங்கத்துடன் இணைந்து பணியாற்ற ஆர்வமாக உள்ளதாக கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகம் தெரிவித்துள்ளது.

இலங்கையின் புதிய பிரதமராக ரணில் விக்ரமசிங்க நேற்று முன்தினம் பதவியேற்றார். இந்த நிலையில், இலங்கையின் புதிய அரசாங்கத்துக்கு இந்தியா ஆதரவு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக தூதரகத்தின் ருவிட்டர் பதிவில்-

"இலங்கை பிரதமராக ரணில் விக்ரமசிங்க பதவிப் பிரமாணம் செய்துகொண்டதன் அடிப்படையில், ஜனநாயக நடைமுறைகளுக்கு இணங்க அமைக்கப்பட்ட இலங்கை அரசாங்கத்துடன் இணைந்து பணியாற்ற எதிர்பார்த்துள்ள இந்தியத் தூதரகம் அரசியல் ஸ்திரத்தன்மை குறித்தும் நம்பிக்கை கொள்கின்றது" என குறிப்பிடப்பட்டுள்ளது.

இதைப்போல இலங்கை மக்களுக்கான உதவிகள் தொடரும் எனவும் தூதரகம் தெரிவித்துள்ளது. (அ)

# கட்சியுடன் ஆலோசிக்காமல் பிரதமர் ஆகிவிட்டார் ரணில்

## ஐ.தே.கவுக்குள் பிரச்னை ஆரம்பம்

கொழும்பு, மே. 14

பிரதமர் பதவியை ஏற்று புதிய அரசை அமைப்பதற்கு ரணில் விக்கிரமசிங்க எடுத்த தீர்மானம் குறித்து ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுவில் ஆலோசனை நடத்தப்படவில்லை என கட்சிப் பிரமுகர் நவீன் திஸாநாயக்க குற்றம் சுமத்தியுள்ளார்.

இது குறித்துநவீன் திசாநாயக்கவின் ருவிற்றர் பதிவில்,

ரணில் பிரதமராக நியமிக்கப்பட்டது குறித்து நான் பயமாகவும் கவலையுடனும் இருக்கிறேன்.இந்த நடவடிக்கை குறித்து கட்சியின் செயற்குழுவிடம் ஆலோ



சிக்கவேண்டும் என்று நான் விரும்புகிறேன், அது நடக்கவில்லை.நாட்டின் நலனுக்காகவும், எங்கள் கட்சிக்காகவும் புதிய பிரதமர் வெற்றி பெறுவார் என்று நம்புகிறேன்-என குறிப்பிட்டுள்ளார். (அ)

# வன்முறை பற்றிய முறைப்பாடுகளுக்கு 3 தொலைபேசி இலக்கங்கள் அறிவிப்பு

கொழும்பு, மே. 14

நாடு முழுவதும் வன்முறை மற்றும் சட்டம் ஒழுங்கை சீர்குலைக்கும் சம்பவங்கள் குறித்து பொதுமக்கள் தகவல் வழங்க 3 தொலைபேசி இலக்கங்களை பாதுகாப்பு அமைச்சு அறிமுகப்படுத்தியுள்ளது.

தீ வைப்பு, கொள்ளை, தாக்குதல் மற்றும் பொது அல்லது தனியார் சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தல் போன்ற சம்பவங்கள் குறித்து தெரிவிக்குமாறு பொதுமக்களிடம் பாதுகாப்பு அமைச்சு கோரிக்கை விடுத்துள்ளது.

இதன்படி, 0767 393 977, 0112 441 146 அல்லது 118 ஆகிய எண்களின் ஊடாக தகவல்களை வழங்க முடியும்.

இதேவேளை, கடந்த திங்கட்கிழமை அலரி மாளிகைக்கு எதிரே மற்றும் காலி முகத்திடலில் பதிவான வன்முறைகள் மற்றும் மோதல்களின்போது ஏற்பட்ட காயங்கள் மற்றும் சொத்து சேதங்கள் பற்றிய தகவல்களை வழங்குமாறு குற்றப் புலனாய்வுத் திணைக்களம் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இதன்படி, 0112 422 176, 0112 320 145, 0718 592 087, 0718 594 942 அல்லது 0718 59 4 901 ஆகிய இலக்கங்களுக்கு ஊடாக குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு தகவல்களை வழங்க முடியும். (அ)

# "ரணில் கோ கம" போராட்டம் நடத்துவோம்!

## "கோட்டா கோ கம" குழு அறிவிப்பு

கொழும்பு, மே. 14

புதிய பிரதமராக பதவியேற்றுள்ள ரணிலுக்கு எதிராக "ரணில் கோ கம" போராட்டம் நடத்துவோம் என்று காலி முகத்திடலில் போராட்டம் நடத்துவோர் அறிவித்துள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை பிரதமராக நியமித்தமை தொடர்பில் காலி முகத்திடல் மைதானத்தில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

ரணில் விக்கிரமசிங்கவை பதவியில் இருந்து நீக்கும் நோக்கில் எதிர்காலத்தில் "ரணில் கோ கம" எனும் பெயரில் போராட்டம் நடத்தப்படும் என்று அனைத்து பல்கலைக் கழக மாணவர் சம்மேளனத்தின் ஒருங்கிணைப்பாளர் வசந்த முதலிகே தெரிவித்துள்ளார். (அ)

# ரணிலின் அமைச்சரவையில் நாம் இடம்பெறவேமாட்டோம்

## சஜித் அணி திட்டவட்டம்

கொழும்பு, மே. 14

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க தலைமையிலான அமைச்சரவையில் ஐக்கிய மக்கள் சக்தி அமைச்சு பொறுப்புக்களை ஏற்காது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

விக்ரமசிங்கவின் அமைச்சரவையில் இணைவதற்கான உத்தியோகபூர்வ அறிவிப்பு எதனையும் தமது பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவிக்கவில்லை என கட்சியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்துமபண்டார தெரிவித்துள்ளார். (அ)

# ஊடகவியலாளர்களை சந்திக்கிறார் மஹிந்த?

கொழும்பு, மே. 14

பிரதமர் பதவியில் இருந்து விலகுவதற்கான தனது தீர்மானம் மற்றும் அதன் பின்னர் நாட்டில் ஏற்பட்ட நிலைமைகள் தொடர்பான உண்மையான வெளிப்பாட்டை வெளியிடவுள்ளதாக முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளதாக சிங்கள இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த ஊடகவியலாளர் சந்திப்பை எதிர்வரும் நாட்களில் கொழும்பில் நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாகவும், சகல ஊடகவியலாளர்களையும் பங்கேற்குமாறும் அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

நாட்டில் தற்போது நிலவும் நிலைமைகள் மற்றும் அதற்கான காரணங்களை வெளிப்படுத்த முடியும் என்று நம்புவதாக அவர் குறிப்பிட்டுள்ளதாக அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# புதிய அமைச்சரவையில் இடம்பெற விரும்பினால் உடனே அறிவியுங்கள்

## ஐக்கிய மக்கள் சக்தியிடம் ஜனாதிபதி கோரிக்கை

கொழும்பு, மே. 14

புதிய அமைச்சரவையில் இடம் பெறுவதற்கு ஐக்கிய மக்கள் சக்தி இணக்கம் தெரிவிக்குமாயின் அது தொடர்பில் தனக்கு தாமதமின்றி அறிவிக்குமாறு ஜனாதிபதி கோரிக்கை விடுத்துள்ளார்.

பிரதமர் பதவியை ஏற்பது தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ அனுப்பிய கடிதத்துக்கு பதிலளிக்கும் வகையிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமைக்கு தீர்வு காணும்



விதமாக பல்வேறு தரப்பினரும் முன்வைத்த யோசனைக்கு அமைவாக இடைக்கால அரசாங்கத்தை அமைப்பதற்காக முதலில் சஜித் பிரேமதாஸவுக்கே அழைப்பு விடுக்கப்பட்டதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சுட்டிக்காட்டியுள்ளார். (அ)

# புதிய அரசில் அமைச்சர்கள் எண்ணிக்கை 20 மட்டும்தான்

கொழும்பு, மே. 14

புதிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கத்தில் ஜனாதிபதி மற்றும் பிரதமருடன் அமைச்சரவை அமைச்சர்களின் எண்ணிக்கை 20 ஆக மட்டுப்படுத்தப்படும்.

மேலும், அதிக எண்ணிக்கையிலான நிறுவனங்களைக் கொண்ட பெரிய அமைச்சுக்களுக்கு மட்டுமே பிரதி அமைச்சர்கள் நியமிக்கப்படுவார்கள்.

புதிய அரசாங்கம் இராஜாங்க அமைச்சுப் பதவிகளை வழங்குமா என்பது தொடர்பில் இன்னும் இறுதித் தீர்மானம் எடுக்கப்படவில்லை.

அடுத்த வாரம் பாராளுமன்றம் கூடுவதற்கு முன்னதாக அமைச்சரவை பதவிப்பிரமாணம் செய்து கொள்ளப்படும் என அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (அ)



# ஐ.நா. சபையின் வாயிலில் 'முள்ளிவாய்க்கால் கஞ்சி'

நியூயோர்க், மே 14

முள்ளிவாய்க்கால் தமிழினப் படுகொலை வாரம் நேற்று ஆரம்பமான நிலையில் நியூயோர்க்கில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் தலைமையகம் முன்பாக நேற்று முன்தினம் முள்ளிவாய்க்கால் கஞ்சி பரிமாறப்பட்டது.

போரைத் தடுத்து, உயிர்களை காப்பாற்ற ஐ.நா தவறியது என ஐ.நாவின் உள்ளக அறிக்கையே தெளிவாக குறிப்பிட்டுள்ள நிலையில், இனப்படுகொலைக்கு உள்ளான தமிழர்களுக்கு பரிகார நீதியினை பெற்றுக்கொடுக்க வேண்டிய பொறுப்பு ஐ.நா.வுக்கு உண்டென முள்ளிவாய்க்கால் கஞ்சி பரிமாறும் நிகழ்வில் பங்கேற்ற புலம்பெயர் தமிழ் மக்கள் தெரிவித்தனர்.

இரத்தம் தோய்ந்த தமது வரலாற்றின் வலிகளை அடுத்தடுத்த தலைமுறைகளிடம் கடத்தும் பண்பாடாக 20 ஆம் நூற்றாண்டின் மிகப்பெரிய இனப் படுகொலைக்கு உள்ளான ஆர்மேனியர்கள் "ஹரிஸ்ஸா" உணவையும், யூதர்கள் "மற்சூ" உணவையும் கொண்டிருப்பது போல், ஈழத்தமிழர்கள் நாமும், "முள்ளிவாய்க்கால் கஞ்சி"யினை எமது அடுத்த தலைமுறையிடம் கடத்தும் ஓர் விடுதலைப் பண்பாடாக இதனை முன்னெடுப்போம் என நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் ஐ.நா. சபை முன்பாக வைத்துக் கருத்து வெளியிட்டனர். (அ)

# பொலிஸ், இராணுவத்துக்கு மிதமிஞ்சிய அதிகாரங்கள்!

## ஐ.நா. நிபுணர் கண்டனம்

கொழும்பு, மே 14

**இலங்கையில் பொலிஸார் மற்றும் இராணுவத்தினருக்கு வழங்கப்பட்டுள்ள அவசரகால அதிகாரங்கள், மிதஞ்சிய படையினரின் பயன்பாடு, தன்னிச்சையான கைதுகள் உள்ளடங்கலாக ஆர்ப்பாட்டங்கள் முடக்கப்பட்டுள்ளமையைக் கடுமையாகக் கண்டிப்பதாக ஒன்றுகூடுதலுக்கான சுதந்திரம் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் விசேட அறிக்கையாளர் கிளெமன்ற் வொயூல் தெரிவித்துள்ளார்.**

தனது உத்தியோகபூர்வ ருவிட்டர் பக்கத்தில் செய்திருக்கும் பதிவிலேயே ஐ.நாவின் விசேட அறிக்கையாளர் மேற்கண்டவாறு கண்டனம் வெளியிட்டுள்ளார்.

"பொலிஸார் மற்றும் இராணுவத்தினருக்கு வழங்கப்பட்டுள்ள அவசரகால அதிகாரங்கள், மிதஞ்சிய படையினரின் பயன்பாடு, தன்னிச்சையான



கைதுகள் உள்ளடங்கலாக ஆர்ப்பாட்டங்கள் முடக்கப்பட்டுள்ளமையை நான் கடுமையாகக் கண்டிக்கின்றேன்.

அதிகாரிகள் ஆர்ப்பாட்டக்காரர்கள்மீது அடக்குமுறைகளைப் பிரயோகிப்பதை நிறுத்திக்கொள்வதுடன், அவர்களது உரிமைகளுக்கு மதிப்பளித்துப் பாதுகாக்கவேண்டும். மாறாக அவர்களை அமைதிப்படுத்துவது முறையான பதிலாக இருக்காது" என்ற தெரிவித்துள்ளார். (அ)

# மருந்துகள் தட்டுப்பாடு காரணமாக வைத்தியசாலைகளில் மரணங்கள்!

## மருத்துவர்கள் சங்கம் கவலை

கொழும்பு, மே 14

நாட்டில் உள்ள மருத்துவ மனைகளில் உருவாகியுள்ள மருந்து தட்டுப்பாடுகளினால் அநியாயமாக பலர் உயிரிழந்து வருகின்றனர் என்று மருத்துவ மற்றும் சிவில் உரிமைகளுக்கான மருத்துவர்கள் சங்கம் கவலை வெளியிட்டுள்ளது.

பல மருத்துவமனைகளின் மருத்துவர்கள் இது தொடர்பாக தமக்கு அறிவித்துள்ளதாக சிவில் உரிமைகளுக்கான மருத்துவர்கள் சங்கத்தின் தலைவர் மருத்துவர் சமல் சஞ்சீவ தெரிவித்தார்.

எதிர்காலத்தில் மருத்துவ மனைகளில் மருந்துகள் மற்றும் சத்திர சிகிச்சை உபகரணங்களின் பற்றாக்குறை மோசமடையும் என்றும் நோயாளிகளின் உயிருக்கு பெரும் ஆபத்தை ஏற்படுத்தும் ஒரு முக்கியமான கட்டத்தில் சுகாதாரத்துறையை கொண்டு வந்து நிறுத்தும் என் றும் அவர் சுட்டிக்காட்டியுள் ளார். (அ)

# ஜே.வி.பிக்கு எதிராக வழக்கு தொடுக்க தயாராகும் டிலான்

கொழும்பு, மே 14

எனது அரசியல் வரலாற்றில் பொய்யான குற்றச்சாட்டுகளை முன்வைப்பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா சமூக வலைத்தளங்களில் ஒரு குறிப்பை இட்டுள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடக சந்திப்பொன்றில் ஜே.வி.பி பாராளுமன்ற உறுப்பினர்களான அனுரகுமார திசாநாயக்க மற்றும் சுனில் ஹந்துன்நெத்தி ஆகியோர், பெருமளவிலான பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் முக்கியஸ்தர்களின் பண மோசடியை அம்பலப்படுத்தினர். இதன்போது, பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேராவின் பெயரும் வெளியிடப்பட்டிருந்தது.

இதற்கு அவர் தமது எதிர்ப்பை வெளியிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் கருத்து தெரிவிக்கையில்,

28 ஆண்டுகளாக பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் செய்தவர். வணிகவியல் மற்றும் பார் தேர்வில் சிறப்புப் பட்டம் பெற்றவர், இலங்கை நிர்வாக சேவைக்கு தெரிவான என்னை போன்ற அரசியல்வாதிக்கு, மே தினக் கூட்டத்திற்கு உணவு கொண்டுவந்து போலியான உண்டியல் ரசீதுகளைப் பெற்றதாக ஜே.வி.பி தலைவர் குற்ற ஞ்சாட்டியுள்ளார்.28 வருடங்களில் நான் கேள்விப்பட்ட மிகப் பெரிய முட்டாள்தனம் என்று கூறலாம்.

காலியில் மே தினக் கூட்டத்திற்கு எல்லவில் உள்ள கடையொன்றில் இருந்து உணவுப் பொட்டலங்களை எடுத்துச் சென்றமைக்கும் எனக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. இந்த பொய்யான குற்றச்சாட்டுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதை எனது சட்ட ஆலோசகர்களிடம் விட்டுவிடுகிறேன்.

தேசிய அரசாங்கமே பொருத்தமானது என ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர் ஒருவர் தெரிவித்த கருத்தை நான் பாராட்டுகின்றேன். ஐக்கிய மக்கள் சக்தியில் இணையுமாறு பரிந்துரைத்திருந்தார். நான் ஒருபோதும் முதலாளித்துவ முகாமில் இருக்கமாட்டேன்.

தேர்தலுக்குத் தள்ள முற்படும் நாடு தேர்தலுக்குத் தயாராகாத நிலையில், அனைத்துக் கட்சிகளும் ஒன்றிணைந்து ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு காபந்து அரசாங்கத்தை அமைக்குமாறு நான் அழைப்பு விடுக்கின்றேன்-என்றார். (அ)

# ரணில் அரசுடன் இணைவதற்கு இ.தொ.கா, ஈ.பி.டி.பி. இணக்கம்!

கொழும்பு, மே 14

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி என்பன ஆதரவு வழங்க முன்வந்துள்ளன.

இதனிடையே, ஐக்கிய மக்கள் சக்தியின் பங்காளிக் கட்சியான தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன், "மிக பிரபலமான அமைச்சு பதவிகளை பெற்று ஆட்சியில் நாம் பங்கு பெறலாம். இதற்கான அழைப்பு எமக்கு எப்போதும் இருக்கிறது.", என்று கூறியுள்ளார்.

பிரதமராகப் பொறுப்பேற்றுள்ள ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தை அமைப்பதற்கான பெரும்பான்மையை நிரூபிக்க வேண்டும். அவர் இவ்வாறு பெரும்பான்மை யை நிரூ பிக்க, ஆளும் கட்சியின் ஒரு சாரர் ஆதரவு தெரிவிப்பர் என்று அறிய வருகின்றது.

இதேபோன்று, மஹிந்த தலைமையிலான ஆளும் கட்சியில் அங்கம் வகித்த பங்காளிக் கட்சிகளான இ. தொ. கா, ஈ. பி. டி. பி. ஆகியன ஆதரவு வழங்கத் தயாராகவுள்ளன என்று தெரிவித்துள்ளன.

பிரதமர் ரணிலுக்கு ஈ. பி. டி. பியின் டக்ளஸ் தேவானந்தா விடுத்த வாழ்த்துச் செய்தியில், நாட்டுக்கும் தமிழ் மக்களுக்கும் நன்மைகளை உருவாக்கக் கூடிய பிரதமரின் செயல்பாடுகளுக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்க தயாராக இருப்பதாக தெரிவித்துள்ளார்.

அத்துடன், "ரணில் விக்கிரமசிங்க தலைமையில் உருவாகவுள்ள புதிய அரசாங்கத்துக்கு ஏனைய தமிழ் கட்சிகளும் ஆதரவு வழங்க வேண்டும்", என்று அவர் கேட்டுள்ளார்.

இதனிடையே, முகநூலில் கருத்து பதிவிட்டுள்ள மனோ கணேசன் எம். பி., "எமது ஐக்கிய மக்கள் கூட்டணி, ஆட்சி பொறுப்பை ஏற்காமைக்கு காரணம், பிரதான எதிரணியான எமது கொள்கை கோட்பாடுகள். நமது கட்சி, தமிழ் முற்போக்கு கூட்டணி. நாம், எமது தமிழ் மக்களின் தனித்துவமான அரசியல் அணி. எமது மக்களை நாம் நேரடியாக பிரதிநிதித்துவம் செய்கிறோம். இந்த நிமிடம்கூட, எமது அரசியல்குழு முடிவு செய்தால், மிக பிரபலமான அமைச்சு பதவிகளை பெற்று ஆட்சியில் நாம் பங்கு பெறலாம். இதற்கான அழைப்பு எமக்கு எப்போதும் இருக்கிறது. இதை அனைத்து தரப்பினரும் மனதில் கொள்ள வேண்டும். ஆனால், அதை நாம் செய்யவில்லை. மாறாக வெளியிலிருந்து பிரதமரை, எமது "முன்னாள் பிரதமரை" வாழ்த்துகிறோம். தற்சமயம், தமிழ் முற்போக்கு கூட்டணியாக, நாம் எதிரணியில் இருக்கிறோம். நடப்புகளை அவதானித்து பொறுப்புடன் கட்சியாக பயணிக்கிறோம்.", என்று கூறியுள்ளார். (ஐ)

# சாதாரண தர பரீட்சைக்கான மேலதிக வகுப்புகளுக்கு தடை

கொழும்பு, மே 14

க.பொ.த சாதாரண தர பரீட்சையுடன் தொடர்புடைய கருத்தரங்குகள், மேலதிக வகுப்புகள் மற்றும் கலந்துரையாடல்களுக்கு எதிர்வரும் 17ஆம் திகதி நள்ளிரவு முதல் தடை விதிக்கப்பட்டுள்ளது.

கல்விப் பொதுத் தராதர சாதாரணதரப் பரீட்சை, எதிர்வரும் 23 ஆம் திகதி முதல், ஜூன் மாதம் முதலாம் திகதி வரை நடைபெறவுள்ள நிலையிலேயே பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் இந்த அறிவித்தலை வெளியிட்டுள்ளார்.

இந்த தடை உத்தரவை மீறினால் பரீட்சை சட்ட விதிகளின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும் என ஆணையாளர் நாயகம் தெரிவித்தார்.

மேலும் சாதாரணதரப் பரீட்சையை நடத்துவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் தயார் நிலையில் இருப்பதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் குறிப்பிட்டார். (அ)

# புதிய பிரதமர் ரணிலுக்கு நிபந்தனையற்ற ஆதரவு

## சுயேச்சைக் குழு அறிவிப்பு

கொழும்பு, மே.14

**பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு நிபந்தனையற்ற ஆதரவளிப்பதாக மஹிந்த அரசில் இருந்து விலகிய 10 கட்சிகளின் சுயேச்சைக் குழுவினர் அறிவித்துள்ளனர்.**

இது தொடர்பாக சிங்கள வானொலி ஒன்றுக்கு சுயேச்சைக் குழுவின் உறுப்பினரான வீரசுமண வீரசிங்க தெரிவிக்கையில், "எந்தவொரு சலுகைகளையும் பெறாமல் நாட்டின் சார்பாக பிரதமரின் வேலைத்திட்டத்திற்கு நிபந்தனையற்ற ஆதரவளிக்கவுள்ளோம்" என்று கூறியுள்ளார். (அ)

# இலங்கைக்கு விரைவில் இந்தியாவின் நிதியுதவி

கொழும்பு, மே. 14

இலங்கையில் புதிய பிரதமரின் நியமனத்துக்கு சமாந்தரமாக இந்திய அரசாங்கத்தின் அறிவிப்பு ஒன்று வெளியாகலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதன்படி இந்தியாவின் ஏற்றுமதி நிதியளிப்பு வங்கியான எக்சிம் வங்கி, நெருக்கடியில் சிக்கியுள்ள இலங்கைக்கான 1.3 பில்லியன் டொலர்களை மறுசீரமைக்க எதிர்பார்ப்பதாக தெரிவித்துள்ளது.

இந்திய எக்சிம் வங்கியின் நிர்வாக அதிகாரி ஹர்ஷா பங்கரி இதனை தெரிவித்தார்.

இலங்கை, தற்போது மோசமான வெளிநாட்டு நாணய நெருக்கடியை எதிர்கொள்கிறது.

எனவே திருப்பிச்செலுத்துவதை ஒத்திவைக்கும் வடிவத்தில் இது அமையலாம் என்று எக்சிம் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

எனினும் இதற்காக இந்திய மத்திய அரசாங்கத்தின் சமிக்ஞையை தமது வங்கி எதிர்பார்த்துள்ளதாக எக்சிம் அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

2021-22 ஆம் ஆண்டில் எக்சிம் வங்கி கடன்களில் 13 சதவீத வளர்ச்சியை கொண்டிருக்கிறது. (அ)

# அரசியல்வாதிகளால் கைவிடப்பட்ட அமரகீர்த்தி எம்.பியின் இறுதி நிகழ்வு

கொழும்பு, மே. 14

நிட்டம்புவ பிரதேசத்தில் உயிரிழந்த பொதுஜன பெரமுனவின் பொலனறுவை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அத்துக்கோரளவின் இறுதி நிகழ்வு அரசியல்வாதிகளின் பங்களிப்பின்றி நடைபெற்றதாக கொழும்பு செய்திகள் தெரிவித்தன.

பொலனறுவவில் நடைபெற்ற அமரகீர்த்தியின் இறுதி நிகழ்வில் ஊவா மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர் சாமர சம்பத் தசநாயக்கவை தவிர வேறு எந்தவொரு அரசியல்வாதிகளும் பங்கேற்கவில்லை.

அரச தலைவரோ, முன்னாள் பிரதமரோ அல்லது அமரகீர்த்தி பிரதிநிதித்துவப்படுத்தும் பொதுஜன பெரமுனவிடம் இருந்தோ ஒரு அனுதாபச் செய்தி கூட கிடைக்கவில்லை என்று இறுதி நிகழ்வில் பங்கேற்ற மக்கள் அரசியல்வாதிகள் தொடர்பாக மிகுந்த மனவிரக்தியுடன் பேசியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

பொலிஸார் மற்றும் இராணுவத்தினரின் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் பொலனறுவவில் உள்ள 28 ஆம் மைல் பொது மயானத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலை 4 மணியளவில் இறுதி நிகழ்வு நடைபெற்றது. (அ)

# ரணிலின் வருகையால் வலுவடைந்தது ரூபா!

கொழும்பு, மே. 14

புதிய பிரதமராக ரணில் பதவியேற்ற பின்னர் அமெரிக்க டொலருக்கு எதிரான இலங்கை ரூபாவின் பெறுமதி நேற்று வெள்ளிக்கிழமை வலுவடைந்துள்ளதாக கொழும்பு செய்திகள் தெரிவித்தன.

பல தனியார் வங்கிகள் ஒரு டொலர் ஒன்றின் விற்பனை விலை 365 ரூபாவாகவும், ஒரு டொலர் ஒன்றின் கொள்முதல் விலை 355 ரூபாவாகவும் அறிவித்துள்ளது.

நேற்று முன்தினம் டொலர் ஒன்றின் விற்பனை விலை 380 ரூபாவாகவும், கொள்வனவு விலை 365 ரூபாவாகவும் காணப்பட்டதாக மேலும் தெரிவிக்கப்பட்டது. (அ)

# பிரதமரை சந்தித்தார் இந்திய தூதர் பாக்லே



கொழும்பு, மே. 14

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அலரி மாளிகையில் தனது கடமைகளை நேற்றுக் காலை பொறுப்பேற்றுக் கொண்டார்.

அதன்பின்னர், நாட்டின் தற்போதை நிலைமை மற்றும் எதிர்காலத்திட்டங்கள் உள்ளிட்ட விவரங்கள் தொடர்பில் இலங்கைக்கான இந்திய தூதுவர் கோபால் பாக்லேயுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டார்.

நாடு பிரச்னைகளுக்கு முகங்கொடுத்துக்கொண்டிருந்த காலத்தில், இலங்கைக்கு பொருளாதார ரீதியில் உதவிய நாடுகளில் இந்தியாவும் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# சிறுபான்மையினர் நால்வருக்கு வாய்ப்பு?

கொழும்பு, மே. 14

புதிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான இடைக்கால அரசாங்கத்தின் அமைச்சரவையை 20 பேருடன் மட்டுப்படுத்த ஆலோசிக்கப்பட்டு வருவதாக உள்வீட்டு தகவல்கள் தெரிவிக்கின்றன. அதில், சிறுபான்மை இனங்களைச் சேர்ந்த நால்வருக்கு வாய்ப்பு வழங்குவதற்கும் ஆலோசிக்கப்பட்டு வருவதாகவும் அறியமுடிகின்றது.

முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் அமைச்சரவையில் அங்கம் வகித்தோருக்கு வாய்ப்பில்லை என்றும், சிறுப்பான்மை கட்சிகளுடன் பேரம்பேசி இறுதித் தீர்மானத்தை எட்டுவதற்கும் ஆலோசிக்கப்பட்டு வருவதாகவும் கூறப்படுகின்றது. (அ)

# வெசாக் தினத்தன்று புதிய அமைச்சரவை?

கொழும்பு, மே. 14

புதிய அமைச்சரவை நியமனம் அநேகமாக வெசாக் தினத்தில் இடம்பெறவுள்ளதாக அரசியல் வட்டாரங்களை மேற்கோள் காட்டி கொழும்பு செய்திகள் கூறின. (அ)

# பாராளுமன்றத்தில் மே 17 இல் ரணிலுக்கு ஆதரவு பிரேரணை



கொழும்பு, மே. 14

பாராளுமன்றத்தில் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை புதிய பிரதமராக பதவியேற்றுள்ள ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாக பிரேரணை நிறைவேற்ற தீர்மானிக்கப்பட்டுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

பெரும்பான்மையான பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவு ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவான பிரேரணையின்போது வெளிப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதிய பிரதமரை பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள் ஆதரிப்பார்கள் என்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் சில உறுப்பினர்கள் மற்றும் பல கட்சிகளின் ஆதரவும் ரணிலுக்கு கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் கொழும்பு செய்திகள் மேலும் கூறின. (அ)

# புதிய அரசாங்கம் ராஜபக்ஷக்களை காப்பாற்றுவதாக அமையக்கூடாது

## சம்பிக்க ரணவக்க சுட்டிக்காட்டு

கொழும்பு, மே. 14

ராஜபக்ஷக்களைக் காப்பாற்றி அவர்களுக்கு மன்னிப்பு வழங்க தமது நேரத்தை ஒதுக்குவது என்பது சர்வகட்சி அரசாங்கம் அமைப்பதற்கான நோக்கமாக இருக்கக்கூடாது. அது காலத்தின் தேவையும் அல்ல, மாறாக சர்வகட்சி அரசாங்கம் சில முக்கிய விடயங்களில் கவனம் செலுத்தி ஒரு முடிவுக்கு வரவேண்டும் என எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாம் முகம் கொடுத்துக்கொண்டிருக்கும் பொருளாதார அரசியல் பிரச்சினையில் இருந்து விடுபட முதலில் அரசியல் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்தவேண்டும் நாம் இதுவரை காலம் நாட்டை அழிவுக்கு உள்ளாக்கி வங்குரோத்து நிலைக்கு இட்டுச் சென்று கொள்ளையடித்த ராஜபக்ஷக்களை பாதுகாக்கும் அரசாங்கம் அல்ல, மாறாக எமது நாட்டையும் நாட்டு மக்களையும் பாதுகாக்கக்கூடிய குறுகிய மற்றும் மத்திய கால தீர்வுகளை கொண்ட சர்வகட்சி அரசாங்கமாக அமைய வேண்டும்.

அவ்வாறான அரசாங்கம் ஒன்றை நிறுவுவதற்கு இடமளிக்கும் வகையில் கோட்டாபய ராஜபக்ஷ தனது பதவியை துறக்கவேண்டும். அவ்வாறு அவர் விலகும் திகதி காலம் என்பன தெளிவாக முன்மொழியப்பட்டவேண்டும். பதவியேற்கும் இடைக்கால அரசாங்கம் 20 ஆவது திருத்தச் சட்டத்தை நீக்கவேண்டும். ஜனாதிபதியுடைய



அதிகாரங்கள் குறைக்கப்படவேண்டும். சுயாதீன ஆணைக்குழுக்கள் நிறுவப்படவேண்டும் என்பன போன்ற ஜனநாயக அரசமைப்பு முறையை நிறைவேற்றவேண்டும்.

அரசியல் கட்சிகள் பொறுப்புக்கூறலுக்கு உட்படுத்தப்பட்டு அவைகளுக்கு கிடைக்கும் பொருளாதார உதவி, ஊடக பிரசார நேரம் போன்றன தொடர்பாக தெளிவாக முன்னெடுக்கப்பட கூடிய வகையில் மீண்டும் தேர்தல்கள் தொடர்பான சட்ட திட்டங்களை ஒழுங்கு படுத்தப்படவேண்டும்.

ஹொங்கொங் மற்றும் சிங்கப்பூரில் காணப்படுவது போல் ஊழல் ஒழிப்பு நிர்வாகம் ஒன்றை நிறுவவேண்டும்.

இடைக்கால அரசாங்கம் மக்களுக்கு விருப்பமான அரசாங்கம் ஒன்றை தெரிவு செய்து கொள்ளக்கூடிய வகையில் சுயாதீனமாக செயற்பட்டு தேர்தல்களை நடத்தக்கூடிய சுதந்திரமான ஒரு சூழலை உருவாக்க வேண்டும். அத்தோடு சுதந்திர தேர்தல் ஆணைக்குழுவிற்கு பூரண அவகாசம் வழங்கக்கூடிய வகையில் தமது செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும்-என்றார்.

# இலங்கை நெருக்கடியும் புதிய தலைமையும்:

# இந்தியாவுக்கு இது ஏன் முக்கியம்?

**– சரோஜ் சிங்**

இலங்கையில் கடும் பொருளாதார நெருக்கடியில் சிக்கியிருக்கும் வேளையில் அங்கு புதிய பிரதமராக பதவியேற்றிருக்கும் ரணில் விக்கிரமசிங்கவுக்கு தமது ஆதரவையும் வாழ்த்துக்களையும் தெரிவித்திருக்கிறது இந்தியா. அவரது தலைமையிலான அரசுடன் தொடர்ந்து இந்தியா பணியாற்றும் என்று அறிவித்திருக்கிறார் கொழும்பில் உள்ள இந்திய தூதர்.

அடிப்படையில் இந்தியாவையும், இலங்கையையும் நாம் ஒப்பிடமுடியாது. காரணம், பொருளாதாரத்தைப் பொருத்தவரையில் இலங்கை மிகவும் சிறிய நாடு. மக்கள்தொகையும் இந்தியாவை விட மிக, மிகக் குறைவு. இருந்தபோதிலும் சில நாட்களுக்கு முன்பு “இலங்கையில் நடந்தது, தற்போது இந்தியாவில் நடக்கிறது,“ எனக் கூறும் சில பதிவுகளை சமூக வலைதளங்களில் இப்போது பார்க்க முடிகிறது. அப்படியானால் இந்தியாவும் இலங்கையைப் போல ஆகிக்கொண்டிருக்கிறதா?



இந்த கேள்விக்கு பதிலளிக்கும் விதமாக, ஹலால் புறக்கணிப்பு, முஸ்லிம் கடைகள் மற்றும் மசூதிகள் மீதான தாக்குதல்கள் மற்றும் கிறிஸ்தவர்களுக்கு எதிரான வன்முறைகள் பற்றிய, இலங்கையின் டேட்லைனில் இருந்து வெளியிடப்பட்ட செய்திகளின் ஸ்க்ரீன் ஷாட்டுகளும் பகிரப்படுகின்றன.

இலங்கை நெருக்கடியில் இந்த செய்திகளுக்கு என்ன பங்கு என்பது பற்றிய நிபுணர்களின் கருத்து வேறுபட்டுள்ளது. ஆயினும், இந்த நெருக்கடியிலிருந்து கற்றுக்கொள்ள வேண்டிய பாடம் குறித்து வல்லுநர்கள் மத்தியில் ஒரு பொதுவான கருத்து உள்ளது,

இன்று இலங்கையில் நடப்பது பொருளாதார நெருக்கடியாக ஆரம்பித்த ஒரு கதைதான். ஆனால் இந்த பொருளாதார நெருக்கடியின் விளைவு இப்போது அரசியல் நெருக்கடி வடிவத்தில் உலகத்தின் முன்னே வந்துள்ளது.

**போதுமான அந்நிய செலாவணி கையிருப்பு**

இந்தப் பின்னணியில், இலங்கையிடம் இருந்து இந்தியா கற்றுக் கொள்ளக் கூடியவற்றை பொருளாதாரப் பாடங்கள், அரசியல் பாடங்கள் என்று இரண்டாகப் பிரிக்கலாம்.

உலகின் எல்லா பொருளாதாரங்களும் வேறுபட்டவை. ஆனால் அனைவருக்கும் பொருந்தக்கூடிய சில சூத்திரங்கள் உள்ளன என்கிறார் சோனிப்பத்தில் உள்ள அசோகா பல்கலைக்கழகத்தின் பொருளாதாரப் பேராசிரியர் பூலாப்ரி பாலகிருஷ்ணா.

உதாரணமாக, ஒரு நாட்டில் போதுமான அளவு அத்தியாவசிய உணவுப் பொருட்கள் இல்லை என்றால், அந்த நாடு அந்த பொருட்களை வெளியில் இருந்து இறக்குமதி செய்ய வேண்டியிருக்கும். அதற்கு அந்நிய செலாவணி கையிருப்பு தேவைப்படுகிறது. அந்நியச் செலாவணியைப் பெற, அந்த நாடு எதையாவது ஏற்றுமதி செய்ய வேண்டும். அதற்காக அது சர்வதேச சந்தையில் போட்டியிடவும் தயாராக இருக்க வேண்டும்.

“பொருளாதாரத்தைப் பொருத்தவரையில் இலங்கை நெருக்கடியிலிருந்து இந்தியா எடுக்க வேண்டிய முதல் பாடம் அந்நிய செலாவணி கையிருப்பு மீது கவனம் வைப்பதுதான். இந்தியாவின் அன்னிய செலாவணி கையிருப்பு கடந்த சில மாதங்களில் குறைந்துள்ளது உண்மைதான். ஆனால் ஒரு வருடத்திற்கான இறக்குமதிக்கு தேவையான செலாவணி நம்மிடம் உள்ளது. ஆகவே இந்த விஷயத்தில் இந்தியா கவலைப்பட வேண்டியதில்லை. ஆனால், நீண்ட கால அடிப்படையில் இறக்குமதிச் செலவை எப்படிக் குறைக்கலாம் என்பதில் மத்திய அரசு கவனம் செலுத்த வேண்டும்” என்று பேராசிரியர் பூலாப்ரி பாலகிருஷ்ணா தெரிவித்தார்.

ஒரு நாட்டின் அந்நியச் செலாவணி கையிருப்பு குறைந்தது 7 மாத இறக்குமதிக்கு போதுமானதாக இருக்க வேண்டும் என்று கருதப்படுகிறது. இதில் தான் இரண்டாவது பாடம் மறைந்துள்ளது.

**இறக்குமதிச்செலவை குறைக்க நடவடிக்கை**

வரவிருக்கும் நாட்களில், மாற்று எரிசக்தி ஆதாரங்களில் கவனம் செலுத்துவது, நிலக்கரிக்கான வெளிநாட்டு சார்பைக் குறைப்பது, அதே போல் நாட்டிலேயே சமையல் எண்ணெய் உற்பத்தியை அதிகரிப்பதில் கவனம் செலுத்துவது ஆகியவை இந்தியாவுக்கு முக்கியமானது. இது இறக்குமதிச்செலவை குறைத்து தன்னிறைவு அடைய உதவும்.

புள்ளிவிவரங்களின்படி, இந்தியா தனது கச்சா எண்ணெய் தேவையில் 80-85 சதவிகிதத்தை வெளி நாடுகளில் இருந்து இறக்குமதி செய்கிறது. கடந்த சில நாட்களாக, ரஷ்யா - யுக்ரேன் நெருக்கடிக்கு மத்தியில், கச்சா எண்ணெய் விலை ஏற்றம் கண்டது. இந்தியா இதே போல எண்ணெய்க்காக உலக நாடுகளைச் சார்ந்து இருந்தால், கூடவே எண்ணெய் விலை உயர்ந்து கொண்டே இருந்தால், அன்னியச் செலாவணி கையிருப்பு காலி ஆவதற்கு நேரம் பிடிக்காது. ஆகவே மாற்று எரிசக்தி ஆதாரங்களைச் சார்ந்திருப்பதை இந்தியா வேகமாக அதிகரிக்க வேண்டும். இது ஒரே இரவில் நடக்க முடியாதது. இதற்கு நீண்ட திட்டமிடல் தேவைப்படும்.



நிலக்கரி துறையிலும் இதே நிலைதான்.



மின்சாரத்திற்காக இந்தியா, இறக்குமதி செய்யப்படும் நிலக்கரியை நம்பியிருக்கிறது. சமீப காலமாக, சில மாநிலங்கள் மின் நெருக்கடியையும் சந்தித்துள்ளன.

சமையல் எண்ணெய் மற்றும் தங்கத்தின் கதை நிலக்கரி ,பெட்ரோல் மற்றும் டீசல் ஆகியவற்றிலிருந்து வேறுபட்டதல்ல. இந்தியாவின் இறக்குமதிச் செலவில் பெரும்பகுதி இவற்றுக்காகச் செலவிடப்படுகிறது.

இந்த சார்பைக் குறைக்க, அரசுடன் இணைந்து, பொதுமக்களும் முன்முயற்சி எடுக்க வேண்டும். இலங்கை நெருக்கடியின் மறுபக்கம் அரசியல். அதிலும் இந்தியா கற்றுக் கொள்ளக்கூடிய விஷயங்கள் ஏராளமாக உள்ளன.

**அதிகாரத்தை மையப்படுத்துதல்**

பல ஆண்டுகளாக ஒரு சிலரின் கைகளில் அதிகாரத்தை மையப்படுத்துவது எந்த நாட்டுக்கும் உகந்தது அல்ல என்று பேராசிரியர் பூலாப்ரி பாலகிருஷ்ணா கூறுகிறார்.

இலங்கையில் ராஜபக்ஷ குடும்பம் பல ஆண்டுகளாக அதிகாரத்தில் எப்படி ஆதிக்கம் செலுத்தி வருகிறதோ, அதேபோன்ற நிலைதான் இந்தியாவிலும் உள்ளது என்கிறார் அவர். இங்கும் பொருளாதார மற்றும் அரசியல் முடிவுகளை எடுக்கும் உரிமை அரசின் சில தேர்ந்தெடுக்கப்பட்ட ஆலோசகர்களின் கைகளில் மட்டுமே உள்ளது. சொல்லப்போனால், இந்தியாவில் உள்ள எல்லா அரசுகளும் (கேரள மாநில அரசாக இருந்தாலும் சரி, மத்தியில் மோதி அரசாக இருந்தாலும் சரி) பக்க சார்பு மனப்பான்மையுடன் செயல்படுகின்றன.

இலங்கை நெருக்கடியிலிருந்து படிப்பினைகளை எடுத்துக் கொண்டு இந்திய அரசு இந்த உத்தியில் மாற்றத்தைக் கொண்டுவர வேண்டும் என்று அவர் தெரிவிக்கிறார்.

**பெரும்பான்மைவாத அரசியல்**

இலங்கையில் சிங்களர்கள் பெரும்பான்மையாகவும், தமிழர்கள் சிறுபான்மையாகவும் உள்ளனர். பெரும்பான்மைவாத அரசியல் செய்வதாக அங்குள்ள அரசு மீது அடிக்கடி குற்றம் சாட்டப்படுகிறது. இதே குற்றச்சாட்டை முன் வைத்து காங்கிரஸ் தலைவர் ஜெய்ராம் ரமேஷ் ட்வீட் செய்துள்ளார்.

“நீண்ட காலமாக நான் இலங்கையை கூர்ந்து கவனித்து வருவதால், இந்த அழகான நாட்டில் நிலவும் நெருக்கடியின் வேர், சிலகாலமாக நிலவும் பொருளாதார நெருக்கடியைக்காட்டிலும், கடந்த சில தசாப்தங்களாக நிலவும் மொழி, மத மற்றும் கலாசார ரீதியிலான பெரும்பான்மைவாத அரசியலுடன் தொடர்புடையது என்று என்னால் கூற முடியும். இதில் இந்தியாவிற்கும் படிப்பினை உள்ளது” என்று ஜெய்ராம் ரமேஷ் பதிவிட்டுள்ளார்.

இன்றும் இந்தியாவில், பாஜக ஆட்சியில் இல்லாத பல மாநிலங்கள் இந்தி மொழியை திணிப்பதாக குற்றம் சாட்டி வருகின்றன. ஹிஜாப், ஒலி பெருக்கி, கோவில்-மசூதி தகராறு, இறைச்சி தகராறு என்று நாட்டின் பல்வேறு மாநிலங்களில் இருந்து செய்திகள் வருகின்றன.

“நான் பெரும்பான்மைவாத அரசியலை கலாசார நிகழ்ச்சி நிரலுடன் தொடர்புபடுத்துகிறேன். இதுபோன்ற அரசியலால், நாட்டின் ஒரு பகுதி தனிமைப்படுத்தப்பட்டதாக உணரத் தொடங்குகிறது. இதன் விளைவாக அரசின் கவனம் உண்மையான பிரச்சனைகளில் இருந்து திசை திருப்பப்படுகிறது,” என்று பேராசிரியர் பூலாப்ரி கூறுகிறார் .இலங்கையிலும் அப்படித்தான் நடந்தது. இந்தியாவிலும் பல்வேறு மாநிலங்களில் இது நடந்து வருகிறது.

**வலுவான சிவில் சமூகம் மற்றும் அரசியலமைப்பு அமைப்புகள்**

ஒரு நாட்டில் இது நடக்கும் போது, சிவில் சமூகம் மற்றும் அரசியலமைப்பு அமைப்புகளும் அதில் பெரும் பங்கு வகிக்கின்றன.

இதை சுட்டிக்காட்டி கோடக் மஹிந்திரா வங்கியின் சிஇஓ உதய் கோடக் ட்வீட் செய்துள்ளார். “ரஷ்யா-யுக்ரேன் போர் நடந்து வருகிறது. அது இன்னும் கடுமையாகி வருகிறது. நாடுகளுக்கு உண்மையான சோதனை இப்போது தான். நீதித்துறை, காவல்துறை, அரசு, நாடாளுமன்றம் போன்ற அமைப்புகளின் வலிமை முக்கியமானதாக இருக்கும். மக்களை கவருவதற்காக அல்லாமல், சரியானதைச் செய்வது முக்கியம். எதைச் செய்யக்கூடாது என்பதை “எரிந்து கொண்டிருக்கும் இலங்கை“ நமக்குச் சொல்கிறது.”என்று அவர் பதிவிட்டுள்ளார்.

(09 ஆம் பக்கம் பார்க்க...)

# பிரதமர் ரணில் விக்ரமசிங்க:
## தனியொரு எம்.பி ஆக இருந்து 6வது முறையாக பிரதமர் ஆனவர்!

இலங்கை வரலாறு காணாத அரசியல் பொருளாதார சிக்கலில், நிச்சயமற்ற நிலையில் தவிக்கும்போது 6-வது முறையாக பிரதமர் பதவி ஏற்றுள்ள ரணில் விக்ரமசிங்க இலங்கை அரசியலில் என்றுமே தவிர்க்க முடியாத ஒரு ஆளுமையாக திகழ்ந்து வருகின்றார்.

கடந்த நாடாளுமன்ற தேர்தலில் என்றுமே இல்லாத தோல்வியை ரணில் விக்ரமசிங்க மற்றும் அவரது கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி ஆகியன சந்தித்திருந்தன.

தேர்தலின் ஊடாக ஒரு நாடாளுமன்ற ஆசனத்தை கூட ஐக்கிய தேசியக் கட்சியினால் பெற்றுக்கொள்ள முடியவில்லை.

எனினும், இலங்கையில் காணப்படுகின்ற தேசிய பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியின் ஊடாக, ஐக்கிய தேசிய கட்சிக்கு ஒரு நாடாளுமன்ற ஆசனம் கிடைத்தது.

இந்த ஒரு நாடாளுமன்ற ஆசனத்தின் ஊடாக, நாடாளுமன்ற பிரவேசத்தை பெற்ற ரணில் விக்ரமசிங்க, நாடாளுமன்றத்திலுள்ள 225 பேருக்கு மத்தியில் தனியொருவராக அமர்ந்து, தனது அரசியலை நடத்தி வந்தார்.

இவ்வாறு தனியொருவராக நாடாளுமன்றத்தில் அமர்ந்திருக்கும் ரணில் விக்ரமசிங்க, இன்று பிரதமர் என்ற அங்கீகாரத்தை பெற்றுள்ளார்.

இலங்கை அரசியலில் தவிர்க்க முடியாத ஆளுமையாக பரிமாணம் பெற்றுள்ள இந்த ரணில் விக்ரமசிங்க யார்?

எசுமண்ட் விக்கிரமசிங்க மற்றும் நளினி விக்ரமசிங்க ஆகியோருக்கு 1949ம் ஆண்டு மார்ச் மாதம் 24ம் திகதி ரணில் விக்ரமசிங்க மகனாக பிறந்தார்.

கொழும்பு ராயல் கல்லூரியில் கல்வியை தொடர்ந்த ரணில் விக்ரமசிங்க, கொழும்பு பல்கலைக்கழகத்தில் தனது உயர்கல்வியை தொடர்ந்தார்.

தொழில் ரீதியாக வழக்குரைஞராக செயற்பட்ட அவர், பின்னர் அரசியலில் நுழைந்தார்.



இலங்கையின் பொருளாதார நெருக்கடி தீவிரமடைந்து வந்த பின்னணியில், ரணில் விக்ரமசிங்கவின் ஆளுமை மற்றும் சர்வதேச விவகார ஆளுமை ஆகியவற்றினால் நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் ஆளுமை அவருக்கு உள்ளதாக பெரும்பாலானோர் கூறியிருந்தனர்.

### ரணில் விக்ரமசிங்கவின் அரசியல் வாழ்க்கை

கம்பஹா மாவட்டத்திலிருந்து ரணில் விக்ரமசிங்க தனது அரசியல் வாழ்க்கையை தொடங்கினார். ஐக்கிய தேசியக் கட்சியின் களனி தொகுதி பிரதான அமைப்பாளராக 1970ம் ஆண்டு ரணில் விக்ரமசிங்க நியமிக்கப்பட்டு, பின்னர் பியகம தொகுதியின் பிரதான அமைப்பாளராக நியமிக்கப்பட்டார்.

பியகம தொகுதியிலிருந்து நாடாளுமன்ற பிரவேசத்தை பெற்ற ரணில் விக்ரமசிங்க, ஜே.ஆர்.ஜெயவர்தன தலைமையிலான அரசாங்கத்தில் இளம் அமைச்சராக பதவி வகித்தார்.



இளையோர் விவகாரம் மற்றும் தொழில் வாய்ப்பு அமைச்சர் பதவியே, ரணில் விக்ரமசிங்கவிற்கு கிடைத்த முதலாவது அமைச்சு பொறுப்பாகும்.

இவ்வாறு தனது அரசியல் வாழ்க்கையை தொடர்ந்த ரணில் விக்ரமசிங்க, ஐக்கிய தேசியக் கட்சியின் தவிர்க்க முடியாத ஒரு தலைமைத்துவத்தை நோக்கி நகரத் தொடங்கினார். இந்த நிலையில், இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச, 1993ம் ஆண்டு மே மாதம் முதலாம் திகதி, தமிழீழ விடுதலைப் புலிகளின் தற்கொலை குண்டுத் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்தார்.

இதையடுத்து, இடைகால ஜனாதிபதியாக டி.பி.விஜேதுங்க நியமிக்கப்பட்ட நிலையில், அந்த அரசாங்கத்தின் பிரதமராக ரணில் விக்ரமசிங்க நியமிக்கப்பட்டார்.

அதனைத் தொடர்ந்து, 2001ம் ஆண்டு இரண்டாவது தடவையாகவும் நியமிக்கப்பட்டார்.

2015ம் ஆண்டு ஜனவரி மாதம் 8ம் திகதி நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில், ரணில் - மைத்திரி கூட்டணி வெற்றியீட்டியதை அடுத்து, மூன்றாவது தடவையாகவும் ரணில் விக்கிரமசிங்க பிரதமராக நியமிக்கப்பட்டார்.

அத்துடன், 2015ஆம் ஆண்டு நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு, அப்போது நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றியீட்டியதன் ஊடாக, நான்காவது தடவையாக ரணில் விக்கிரமசிங்க பிரதமராக நியமிக்கப்பட்டார்.

நல்லாட்சி காலத்தில் ஏற்பட்ட அரசியல் குழப்பகர நிலைமையினால், அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, தனது அதிகாரத்தை பயன்படுத்தி, ரணில் விக்ரமசிங்கவை அந்த பதவியிலிருந்து நீக்கி, மஹிந்த ராஜபக்‌ஷவை பிரதமராக நியமித்தார்.

ரணில் விக்ரமசிங்க 1993ம் ஆண்டு மே மாதம் 7ஆம் திகதி பிரதமராக நியமிக்கப்பட்டார்.

எனினும், உயர்நீதிமன்ற உத்தரவிற்கு அமைய, ரணில் விக்ரமசிங்க ஐந்தாவது தடவையாகவும் பிரதமராக நியமிக்கப்பட்டிருந்தார்.

2019ம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபய ராஜபக்‌ஷ வெற்றியீட்டியதை அடுத்து, பிரதமர் பதவியிலிருந்து விலகிய ரணில் விக்ரமசிங்க, இந்த ஆட்சியின் கீழ் நடத்தப்பட்ட நாடாளுமன்ற தேர்தலில் பாரிய வீழ்ச்சியுடன் தோல்வியை சந்தித்தார்.

எனினும், தேசிய பட்டியல் ஊடாக ஒரு ஆசனத்தை பெற்ற ஐக்கிய தேசியக் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தி, மீண்டும் நாடாளுமன்ற பிரவேசத்தை ரணில் விக்ரமசிங்க பெற்றார்.

இலங்கையின் பொருளாதார நெருக்கடி தீவிரமடைந்து வந்த பின்னணியில், ரணில் விக்ரமசிங்கவின் ஆளுமை மற்றும் சர்வதேச விவகார ஆளுமை ஆகியவற்றினால் நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் ஆளுமை அவருக்கு உள்ளதாக பெரும்பாலானோர் கூறியிருந்தனர்.

இவ்வாறான நிலையிலேயே, ரணில் விக்கிரமசிங்க 6வது தடவையாகவும் பிரதமராக நியமிக்கப்பட்டுள்ளார்.

# இலங்கை நெருக்கடியும்...

(08 ஆம் பக்கத் தொடர்ச்சி..)

மனோகர் பாரிக்கர் பாதுகாப்பு ஆய்வுகள் மற்றும் பகுப்பாய்வு நிறுவனத்தில் இலங்கை விவகாரங்களை கவனிக்கும் அசோசியேட் பெலோ, டாக்டர் குல்பீன் சுல்தானாவும் உதய் கோடக் குடன் உடன்படுகிறார்.

இலங்கையின் தற்போதைய நிலைமைக்கு பல காரணங்கள் இருப்பதாக அவர் கூறுகிறார். "கடன் சுமை, அரசை நடத்தும் விதம், அதன் கொள்கைகள் போன்றவையே இதற்கு பொறுப்பு. இலங்கை அரசு செய்தது போல், ஆட்சியைப் புறக்கணிக்கக் கூடாது என்றும், வாக்கு அரசியலுக்காக மட்டும் முடிவுகளை எடுக்கக் கூடாது என்றும், இந்திய அரசு பல பாடங்களை கற்க முடியும்," என்று அவர் கூறுகிறார்.

"2019ஆம் ஆண்டில் ஜனாதிபதி தேர்தலின்போது கோட்டாபய ராஜபக்‌ஷ , பொதுமக்களுக்கு வரி விலக்கு அளிப்பதாக உறுதியளித்திருந்தார். ஆட்சிக்கு வந்ததும் அதை அமல்படுத்தினார். அந்த வரி விலக்கு காரணமாக அரசின் வருமானத்தில் பெரும் பாதிப்பு ஏற்பட்டது," என்று அவர் சுட்டிக்காட்டினார்.

வாக்குறுதிகளை அளிக்கும் போது தேர்தல் ஆதாயங்கள் மட்டுமே கணக்கில் கொள்ளப்பட்டன. வல்லுநர்களின் கருத்து மற்றும் பொருளாதாரத்தின் மீதான தாக்கம் புறக்கணிக்கப்பட்டன என்பது தெளிவாகத் தெரிந்தது. இந்த சூழ்நிலையில் நாடாளுமன்றம், நீதித்துறை அல்லது சிவில் சமூகத்தின் குரல் ஓங்கி ஒலிப்பது அவசியமானது.

இந்தியாவிலும் இதுபோன்ற தேர்தல் வாக்குறுதிகள் அள்ளி வீசப்படுகின்றன. சில சமயங்களில் இந்த விவகாரம் நீதிமன்றத்தை எட்டும், சில சமயங்களில் சிவில் சமூகம் குரல் எழுப்பும். சில சமயங்களில் நாட்டின் நாடாளுமன்றத்தில் சலசலப்பு ஏற்படுகிறது.

இந்த அமைப்புகள் மிகவும் விழிப்புடன் இருக்க வேண்டும் என்பது இலங்கை நெருக்கடியின் மிகப்பெரிய படிப்பினைகளில் ஒன்றாகும்.

### விரைவான லாபத்திற்காக நீண்டகால இழப்பு

இலங்கை அரசின் மற்றுமொரு முக்கிய முடிவு மீது கவனம் செலுத்துவது பற்றி டாக்டர் சுல்தானா பேசுகிறார்.

இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் உர இறக்குமதியை நிறுத்தினால் அந்நிய செலாவணியை சேமிக்க முடியும் என அரசு கருதியது. 2021 ஏப்ரலில் கோட்டாபய ராஜபக்‌ஷ, விவசாயத்தில் பயன்படுத்தப்படும் ரசாயனங்கள் இறக்குமதிக்கு தடை விதிப்பதாக அறிவித்தார்.


ஆனால் இந்த முடிவின் நீண்டகால விளைவுகளைப் பற்றி அரசால் சிந்திக்க முடியவில்லை. இதனால், விளைச்சல் பாதிக்கப்பட்டது. உரம் இல்லாமல் விவசாய உற்பத்தி மிகவும் குறைந்தது. நவம்பர் மாதத்திற்குள் அரசு இந்த முடிவை மாற்ற வேண்டி வந்தது.

"அரசு முடிவுகளை மேற்கொள்ளும் போது, பல்வேறு நிபுணர்களின் கருத்தைக்கேட்பது முக்கியம். இதை இந்திய அரசும் புரிந்து கொள்ள வேண்டும். விரைவான ஆதாயங்களுக்காக எடுக்கப்படும் முடிவுகள் நீண்டகால இழப்புகளை ஏற்படுத்தக்கூடும்," என்று டாக்டர் சுல்தானா சுட்டிக்காட்டினார்.

# புலமைச் சிகரம் | தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

கல்வி tv CHANNEL

**08.** 


கீழுள்ள முக்கோண வடிவில் பக்கமொன்றின் எண்கள் மூன்றை கூட்டும் போது 18 வரக்கூடியதாக 4, 6, 10, 12 ஆகிய எண்களினால் வெற்றுக் கூடுகளை நிரப்புக.

(1) A - 12, B - 14, C - 4, D - 8
(2) A - 10, B - 12, C - 4, D - 6
(3) A - 10, B - 12, C - 6, D - 4

- **பின்வரும் கவிதையை வாசித்து 09, 10 ஆகிய வினாக்களுக்குரிய விடையைத் தெரிக.**

தேசம் நமது தெய்வம் - இதைத்
தெரிந்து கொள்ளும் தம்பி
பாசம் எல்லாம் கொட்டி - அதைப்
பாதுகாக்க வேண்டும்


பாட்டன், பாட்டி வாழ்ந்த - எங்கள்
பரம்பரைகள் வாழ்ந்த
நாட்டை வணங்க வேண்டும் - அதன்
நாமம் போற்ற வேண்டும்.

**09.** இக்கவிதை புலப்படுத்துகின்ற பிரதான கருத்து யாது?
(1) கடவுள் பக்தி (2) நாட்டுப் பற்று (3) பரம்பரைப் பற்று

**10.** இக்கவிதையில் வரும் **தேசம், பாசம், நாமம்** ஆகிய சொற்களுக்குப் பதிலாகப் பயன்படுத்தக் கூடிய சொற்கள் முறையே
(1) பூமி, வாஞ்சை, திருமுகம்
(2) நாடு, விருப்பம், திலகம்
(3) நாடு, நேயம், பெயர்

**11.** அருகருகே அமைந்துள்ள மூன்று முழு எண்களின் கூட்டுத் தொகை 126 ஆகும். எனின் அவ் மூன்று எண்களுள் மிகப் பெரிய எண் யாது?
(1) 41 (2) 42 (3) 43

**12.** ஆறு பக்கங்களில் **A, B, C, D, E, F** எழுத்துக்கள் ஓர் எழுத்து என்றவாறு குறிப்பிடப்பட்டுள்ள தாயக்கட்டையொன்றின் மூன்று அமைவுகள் கீழே தரப்பட்டுள்ளன.





அவ் தாயக்கட்டையில் **D** என்ற எழுத்து குறிக்கப்பட்ட பக்கத்திற்கு எதிர்ப்பக்கத்திலே உள்ள எழுத்து எது?
(1) A (2) B (3) E


**13.** தரப்பட்ட கூற்றை அடிப்படையாகக் கொண்டு தவறான விடையைத் தெரிவு செய்க.

**சுமதியின் வகுப்பில் உள்ள அனைவரும் பாட்டுப் பாடுவார்கள். அவர்களுள் பரதன் நன்றாகப் பாடும் திறமையைக் கொண்டிருந்தான்.**

(1) சுமதியை விட பரதன் நன்றாகப் பாட்டுப் பாடுவான்.
(2) பரதன் சுமதியின் வகுப்பில் கல்வி கற்கின்றான்.
(3) பரதனின் வகுப்பில் உள்ள அனைவரும் ஆண்கள் ஆவர்.

**14.** வெற்றுக் கூட்டினுள் வரவேண்டிய விடையைத் தெரிக.




**15.** 


கடிகாரம் X முற்பகல் நேரத்தையும் கடிகாரம் Y பிற்பகல் நேரத்தையும் காட்டுகின்றது. எனின் இரு கடிகாரமும் காட்டும் நேரத்தின் வித்தியாசம் யாது?

(1) 3 மணித்தியாலம் 40 நிமிடங்கள்
(2) 15 மணித்தியாலம் 40 நிமிடங்கள்
(3) 12 மணித்தியாலம் 10 நிமிடங்கள்

## விடைகள்

| | | |
|---|---|---|
| 08. | (3) | A - 10, B - 12, C - 6, D - 4 |
| 09. | (2) | நாட்டுப் பற்று |
| 10. | (3) | நாடு, நேயம், பெயர் |
| 11. | (3) | 43 |
| 12. | (1) | A |
| 13. | (3) | பரதனின் வகுப்பில் உள்ள அனைவரும் ஆண்கள் ஆவர். |
| 14. | (2) | O N / J K |
| 15. | (2) | 15 மணித்தியாலம் 40 நிமிடங்கள் |

கல்வி tv CHANNEL-1

**14.05.2022**
**சனிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | கணிதம் |
| 06.45 | தரம்-08 | விஞ்ஞானம் |
| 07.30 | தரம்-09 | கணிதம் |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | ஊடகம் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | மனைப்பொருளியல் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | சித்திரம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | தமிழ் இலக்கியம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | கத்தோலிக்கம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast வணிகப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் சிங்களம் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறு ஒளிபரப்பு |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் மறு ஒளிபரப்பு அனைத்துப் பாடங்களும் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | ஊடகம் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | மனைப்பொருளியல் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | சித்திரம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | கத்தோலிக்கம் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | தமிழ் |

கல்வி tv CHANNEL - 2

**14.05.2022**
**சனிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | பாட்டு |
| 07.30 | முன்பள்ளி | அழகியல் |
| 08.15 | தரம்-01 | அழகியல் |
| 09.00 | தரம்-02 | கதை |
| 09.45 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 10.30 | தரம்-03 | சைவசமயம் |
| 11.15 | தரம்-04 | Computer |
| 12.30 | தரம்-04 | கிறிஸ்தவம் |
| 01.15 | தரம்-05 | Computer |
| 02.00 | தரம்-05 | கிறிஸ்தவம் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | பாட்டு |
| 04.15 | முன்பள்ளி | அழகியல் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | கதை |
| 06.00 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 06.45 | தரம்-03 | சைவசமயம் |
| 07.30 | தரம்-04 | Computer |
| 08.15 | தரம்-04 | கிறிஸ்தவம் |
| 09.00 | தரம்-05 | Computer |
| 09.45 | தரம்-05 | கிறிஸ்தவம் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 12.30 | தரம்-03 | சைவசமயம் |
| 01.15 | தரம்-04 | Computer |
| 02.00 | தரம்-04 | கிறிஸ்தவம் |
| 02.45 | தரம்-05 | Computer |
| 03.30 | தரம்-05 | கிறிஸ்தவம் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# நீர்நிலைகளில் விலங்குக் கழிவுகளை கொட்டுவோரைக் கண்டறியவேண்டும்

## ஒத்துழைப்பை கோருகிறது கல்முனை மாநகர சபை

கல்முனை, மே. 14

கல்முனை மாநகர சபைக்குட்பட்ட நீர் நிலைகள் மற்றும் பொது இடங்களில் ஆடு, மாடு, கோழிக்கழிவுகளைக் கொட்டி, சூழலை மாசுபடுத்தும் ஈனப் பிறவிகளைக் கைது செய்து, தண்டிப்பதற்கு பொது மக்கள் ஒத்துழைப்பு வழங்க முன்வரவேண்டும் என மாநகர சபை வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது குறித்து மாநகர சபை விடுத்துள்ள அறிக்கையில்-

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி மற்றும் அசாதாரண சூழ்நிலை காரணமாக நிதிப்பற்றாக்குறை மற்றும் எரிபொருள் தட்டுப்பாட்டுக்கு மத்தியிலேயே கல்முனை மாநகர சபையானது திண்மக்கழிவகற்றல் சேவையை சிறப்பாக முன்னெடுத்து வருகின்றது.

எனினும் நாட்டின் அசாதாரண சூழ்நிலை காரணமாக அட்டாளைச்சேனை பள்ளக்காடு பகுதியில் அமைந்துள்ள திண்மக்கழிவகற்றல் நிலையம் வழமை போன்று தொழிற்படாத காரணத்தினால் நாம் பல்வேறு சவால்களுக்கு மத்தியில் மாற்று ஏற்பாடுகளை மேற்கொண்டு இச்சேவையை மிகுந்த சவால்களுக்கு மத்தியில் முன்னெடுத்து வருகின்றோம்.

இந்நிலையில், முடியுமானவரை குப்பை அள்ளும் செயற்பாடுகள் கிரமமாக முன்னெடுக்கப்பட்டே வருகின்றன. இதில் தாமதங்கள் ஏற்படுகின்றபோது- நாட்டு நிலைமையைப் புரிந்து கொண்டு, சகிப்புத் தன்மையுடன் எல்லோரும் ஒத்துழைப்பு வழங்கியாக வேண்டும்.

இருந்தபோதிலும் சிலர் உடனுக்குடன் தமது வீட்டுக்கழிவுகளை அகற்றிவிட வேண்டுமென்பதற்காக பொறுப்பற்ற முறையில் பொது இடங்களிலும் தெருவோரங்களிலும் கழிவுகளை வீசிவிட்டுச் செல்கின்றனர்.

அது மாத்திரமன்றி சாய்ந்தமருது கரைவாகு பொலிவேரியன் வீட்டுத்திட்டத்தை சூழவுள்ள குளங்கள், கல்முனை கிரீன்பீல்ட் வீட்டுத் திட்டத்திற்கு பின்னாலுள்ள ஆற்றங்கரைப் பகுதிகள் மற்றும் தோணாப் பகுதிகள் உள்ளிட்ட நீர் நிலைகளில் ஆடு, மாடு, கோழிக்கழிவுகளையும் இதர குப்பைகளையும் கொட்டி வருகின்றனர்.

இவற்றைக்கூட அடிக்கடி பெருமளவிலான ஆளணியிருடன் கனரக இயந்திரங்கள் கொண்டு பெரும் சிரமங்களுக்கு மத்தியில் மாநகர சபையின் திண்மக்கழிவகற்றல் முகாமைத்துவப் பிரிவு தூய்மைப்படுத்தியே வருகின்றது. இப்பணியில் ஈடுபடுகின்ற சுகாதாரத் தொழிலாளர்களும் எம்மைப்போன்ற மனிதர்களே என்பதை எல்லோரும் உணர்ந்து கொள்ள வேண்டும். தவிரவும் இப்பணிகளை ஒவ்வொரு நாளும் செய்வதற்கான வசதிகள் மாநகர சபையிடம் கிடையாது என்பதையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

மாநகர சபையின் வர்த்தக அனுமதிப் பத்திரம் பெற்ற கோழிக்கடைகளில் சேர்கின்ற கோழிக்கழிவுகள் தினமும் அதற்காக ஒதுக்கப்பட்டிருக்கின்ற பிரத்தியேக திண்மக்கழிவகற்றல் வாகனங்களில் சேகரிக்கப்பட்டு வருகின்றன. அவ்வாறே மாநகர சபையின் வர்த்தக அனுமதிப் பத்திரம் பெற்ற மாட்டிறைச்சிக் கடைகளுக்கான மாடுகள், விலங்கறுமனைகளில் அறுக்கப்படுவதனால், அக்கழிவுகளும் முறையாக அகற்றப்பட்டு வருகின்றன.

ஆனால்- அனுமதி பெறாமல் சட்டவிரோதமாக நடத்தப்படுகின்ற கோழிக் கடைகளினதும் தனி நபர்களினதும் கோழிக்கழிவுகளும் வீடுகளிலும் அங்கும் இங்குமாகவும் சட்டவிரோதமாக அறுக்கப்படும் ஆடு, மாடுகளின் கழிவுகளுமே மேற்படி நீர்நிலைகளில் கொட்டப்படுவதாக அறிய முடிகின்றது. அத்துடன் வீடுகளில் அன்றாடம் சேர்கின்ற கழிவுகளையும் சிலர் பொறுமையில்லாமல் உடனுக்குடன் இவ்வாறான நீர்நிலைகளிலும் தெருக்களிலும் பொது இடங்களிலும் வீசி வருகின்றனர்.

சட்டத்தை மதிக்காமலும் பொது நலன் சார்ந்த உணர்வு எதுவுமில்லாமலும் செய்கின்ற இந்த ஈனச்செயல் மிகவும் கண்டிக்கத்தக்கதும் தண்டனைக்குரிய குற்றமுமாகும்.

ஆகையால், இனிவரும் நாட்களில் இவ்வாறு ஆடு, மாடு, கோழிக்கழிவுகளையும் ஏனைய குப்பைகளையும் மேற்படி இடங்களில் கொட்டும் ஈனப்பிறவிகளை கண்டறிந்து, கைது செய்வதற்கும் அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுப்பதற்கும் அதன் மூலம் எமது மாநகரின் சுற்றுச்சூழல் சுத்தத்தையும் பொது மக்களின் சுகாதாரத்தையும் உறுதிப்படுத்துவதற்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்க முன்வர வேண்டும் என கல்முனை மாநகர வாழ் பொது மக்களை- கல்முனை மாநகர சபை அன்பாய் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறது-என்றுள்ளது. (அ)

# முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு அம்பாறையிலும் ஆரம்பம்





அம்பாறை, மே. 14

கஞ்சி பரிமாறுவோம் முள்ளிவாய்க்கால் வலி சுமந்த கதை பகிர்வோம்“ என்ற தலைப்பில் முள்ளிவாய்க்கால் அவல நிலையை நினைவு கூர்ந்து முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு நேற்று முன் தினம் வியாழக்கிழமை அம்பாறை மாவட்டம் திருக்கோவில் பகுதியில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந் நிகழ்வை வடக்கு-கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சங்கம் ஏற்பாடு செய்திருந்தது.

அம்பாறை மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர் சங்கத் தலைவி தம்பிராசா செல்வராணி தலைமையில் திருக்கோவில் மண்டானை பிள்ளையார் ஆலயத்தில் ஒன்று கூடியவர்கள் முள்ளிவாய்க்கால் கஞ்சியை அவ்விடத்தில் காச்சி வீதியினால் சென்றோர்கள் மற்றும் பஸ் தரிப்பிடங்களில் இருந்தோருடன் பகிர்ந்துகொண்டனர். (அ)

# கடல் நீர் உட்புகுந்தமையால் உழுந்து, நிலக்கடலை பாதிப்பு



அம்பாறை, மே. 14

கடற்கொந்தளிப்பு காரணமாக கல்முனை விவசாய விரிவாகல் பிரிவில் பயிரிடப்பட்ட உழுந்து, நிலக்கடலை என்பன பாதிக்கப்பட்டதாக விவசாயிகள் கவலை தெரிவித்தனர்.

“சௌபாக்கியா“ தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் அம்பாறை மாவட்டத்தில் உப உணவு பயிர்ச் செய்கையை அதிகரிக்கும் வேலைத்திட்டத்தின் கீழ் அம்பாறை மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் எம்.எப்.அஹமட் சனீரின் வழிகாட்டலில் கல்முனை விவசாய விரிவாகல் நிலையத்தின் பிரிவுக்குட்பட்ட கல்முனை அன்பு சகோதர இல்லத்தில் சுமார் நான்கு ஏக்கரில் நிலக்கடலை பயிரிடப்பட்டது.

தீடிரென ஏற்பட்ட கடற்கொந்தளிப்பு காரணமாக கடல் நீர் உட்புகுந்ததால் சுமார் அரை ஏக்கரில் பயிரிடப்பட்ட நிலக்கடலை பயிர் பாதிப்படைந்ததாக விவசாயி எஸ். நல்லதம்பி தெரிவித்தார்.

குறித்த கல்முனை அன்பு சகோதர இல்லத்துக்கு சொந்தமான மற்றுமொறு நிலப்பரப்பில் சுமார் ஒன்றரை ஏக்கரில் பயிரிடப்பட்ட உழுந்து செய்கைக்குள்ளும் கடல்நீர் உட்புகுந்த நிலையில் முற்றாக உழுந்து பயிர் பாதிப்படைந்ததாக விவசாயி கே.கிருபாகரன் தெரிவித்தார்.

இதேவேளை, குறித்த பாதிப்பு நிலைமைகள் தொடர்பில் ஆராய்வதற்காக அம்பாறை மாவட்ட மறுபயிர்ச்செய்கை விவசாய பாடவிதான உத்தியோகத்தர் எஸ்.எச்.ஏ.நிஹார், கல்முனை விவசாய விரிவாகல் நிலையத்தின் பிரதம போதனாசிரியர் எஸ்.கிருத்திகா, கல்முனை விவசாய விரிவாக்கல் நிலையத்தின் விவசாய போதனாசிரியர் என். யோகலக்ஷ்மி ஆகியோர் கடந்த வியாழக்கிழமை குறித்த இடத்துக்கு கள விஜயம் செய்து விவசாயிகளுக்கு தேவையான வழிகாட்டலையும் ஆலோசனைகளையும் வழங்கினர். (அ)

# தாழமுக்கம் காரணமாக அம்பாறை மீனவர் பாதிப்பு



அம்பாறை, மே. 14

வங்கக் கடலில் ஏற்பட்டுள்ள தாழமுக்கம் காரணமாக கடல் அலையின் உயரமும் வேகமும் அதிகமாகவுள்ளது.

அம்பாறை மாவட்டத்தில் தாழ் அமுக்கம் காரணமாக கடல் அலை வழமைக்கு மாறாக முன்நோக்கி வந்துள்ளது. இதனால் மீனவர்கள் கடலுக்கு செல்லலாமல் தங்களது உடைமைகளை பாதுகாக்கும் நடவடிக்கையில் நேற்று வெள்ளிக்கிழமை ஈடுபட்டனர்.

மீனவர்களின் தங்குமிடம் மற்றும் பொதுமக்கள் ஒன்று கூடும் பகுதிகளை கடல் அலைகள் சூழ்ந்துள்ளதுடன் போக்குவரத்து மேற்கொள்ளும் பாதைக்கு அருகாமையில் கடல் அலை வந்ததால் அப்பகுதியில் வசிக்கும் மக்கள் அச்சமடைந்தனர்.

வழமைக்கு மாறாக கடல் அலைகளின் தாக்கம் அதிகரித்து, கடல் நீர் கடற்கரையில் இருந்து சுமார் 100 மீற்றர் தூரத்துக்கு அப்பால் உள்ள நிலப் பகுதிக்குள்ளும் மக்கள் குடியிருப்புப் பிரதேசத்துக்குள்ளும் உட்புகுந்துள்ளது.

நிந்தவூர், அக்கரைப்பற்று, மருதமுனை, பெரியநீலாவணை, காரைதீவு பகுதியில் கடல் நீர் கடற்கரைப் பிரதேசத்தில் அமைக்கப்பட்ட பிரதான காப்பெட் வீதியையும் தாண்டி நிலப்பரப்புக்குள் புகுந்தமையினால் கடற்கரையில் தரித்து வைக்கப்பட்ட படகுகள், சிறிய ரக வள்ளங்கள் மற்றும் கடற்றொழில் உபகரணங்கள் போன்றன கடல் நீரில் அடித்துச் செல்லப்பட்டதாகவும் மீனவர்கள் தெரிவித்தனர். (அ)



## தாமதமின்றி நேட்டோவில் இணைய பின்லாந்து விண்ணப்பிக்கவேண்டும்

*ஜனாதிபதி- பிரதமர் அழைப்பு*

ஹெல்சிங்கி, மே 14

உக்ரைன் போரால் தூண்டப்பட்ட நோர்டிக் நாட்டின் பாதுகாப்புக் கொள்கையில் தீவிரமான மாற்றத்தை உறுதிசெய்து, தாமதமின்றி நேட்டோவில் சேர பின்லாந்து விண்ணப்பிக்க வேண்டும் என்று அதன் ஜனாதிபதியும் பிரதமரும் கூறியுள்ளனர்.

பின்லாந்தின் ஜனாதிபதியும் பிரதமரும் நாடு தாமதமின்றி நேட்டோ உறுப்பினராக விண்ணப்பிக்க அழைப்பு விடுத்துள்ளனர்.

சௌலி நினிஸ்டோ மற்றும் சன்னா மரின் ஒரு கூட்ட றிக்கையில் அடுத்த சில நாட்களில் முடிவை எதிர்பார்க்கிறோம் என்று கூறினர்.

மேலும், 'இந்த முடிவை எடுக்க இன்னும் தேவையான தேசிய நடவடிக்கைகள் அடுத்த சில நாட்களுக்குள் விரைவாக எடுக்கப்படும் என்று நாங்கள் நம்புகிறோம்.' என கூறினர்.

உக்ரைன் மீதான ரஷ்யாவின் ஆக்கிரமிப்பைத் தொடர்ந்து நேட்டோ உறுப்புரிமைக்கு பொதுமக்கள் ஆதரவு அதிகரித்து வரும் நிலையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பின்லாந்து ரஷ்யாவுடன் 1,300-கிமீ (810-மைல்) எல்லையைப் பகிர்ந்து கொள்கிறது. இப்போது வரை, அது அதன் கிழக்கு அண்டை நாடுகளுடன் பகைமையைத் தவிர்ப்பதற்காக நேட்டோவில் இருந்து விலகி இருந்தது.

பாராளுமன்றம் மற்றும் பிற மூத்த அரசியல் பிரமுகர்களால் பரிசீலிக்கப்பட்ட பின்னர் பின்லாந்து தனது முடிவை நாளை ஞாயிற்றுக்கிழமை அதிகாரபூர்வமாக அறிவிக்கும். இதேபோன்ற முடிவை அன்றைய தினம் அறிவிப்பதாக சுவீடன் தெரிவித்துள்ளது.

இதனிடையே, நேட்டோ பொதுச்செயலாளர் ஜென்ஸ் ஸ்டோல்டன்பெர்க், சுவீடன் மற்றும் பின்லாந்து ஆகிய நாடுகளை நேட்டோ உறுப்பினர்களாக ஏற்கும் செயல்முறை மிகவும் விரைவாக நடக்கும் என்றுதான் எதிர்பார்ப்பதாகக் கூறினார். (அ)

# வடகொரியா முழுவதும் பரவும் மர்மக் காய்ச்சல்!

## *3,50,000 பேர் பாதிப்பு; 6 பேர் உயிரிழப்பு!*

பியொங்யாங், மே 14

வட கொரியாவில் பரவி வரும் மர்மக் காய்ச்சாலால் இதுவரை சுமார் 3,50,000 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். பாதிக்கப்பட்டவர்களில் இதுவரை 6 பேர் உயிரிழந்துள்ளதாக அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

மர்மக் காய்ச்சாலால் உயிரிழந்த 6 பேரில் ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் வட கொரிய சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

வட கொரியாவில் முதல் கொரோனா தொற்று நோயாளி ஒருவர் நேற்று உறுதிப்படுத்தப்பட்ட நிலையில் மறுநாளே கொரோனா மரணம் பதிவாகியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தலைநகர் பியொங்யாங்கில் முதல் ஒமைக்ரோன் திரிவு தொற்று நோயாளி நேற்று முன்தினம் உறுதிப்படுத்தப்பட்டதை அடுத்து, நாடு முழுவதும் அவசர நிலை அறிவிக்கப்பட்டு ஊரடங்கு கட்டுப்பாடுகளை நடைமுறைப்படுத்தி வட கொரிய தலைவர் கிம் ஜோங் உன் அறிவித்துள்ளார்.

இந்நிலையில் அங்கு மர்மச் காய்ச்சலால் 3,50,000 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு பாதிக்கப்பட்டவர்களில் கடுமையான அறிகுறிகளை வெளிப்படுத்திய 1,87,000 பேர் மருத்துவமனைகளில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் வரை ஒரு



கொரோனா தொற்று நோயாளி கூட உறுதிப்படுத்தப்படவில்லை என வட கொரியா தெரிவித்து வந்த நிலையில் அங்கு இலட்சக் கணக்கானோர் கொரோனாவால் பாதிக்கப்பட்டிருக்கலாம். இலட்சக்கணக்கானோருக்கு காய்ச்சல் உள்ளிட்ட அறிகுறிகள் தென்படும் நிலையில் நாடு பெரும் கொவிட் அலையில் சிக்கி உள்ளமைக்கான அறிகுறியாக இது இருக்கலாம் என ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த ஆண்டு மில்லியன் கணக்கான அஸ்ட்ராஜெனெகா மற்றும் சீனாவில் தயாரிக்கப்பட்ட கொவிட் தடுப்பூசிகளை வழங்க சர்வதேச அமைப்புக்கள் முன்வந்தபோதும் அதனை வட கொரியா நிராகரித்தது. அதற்கு பதிலாக, 2020 ஜனவரி முதல் அதன் எல்லைகளை மூடி கொவிட் நோயைக் கட்டுப்படுத்தியதாக அந்நாடு அறிவித்தது.

இந்நிலையிலேயே அங்கு தற்போது கொரோனா தீவிரமாகியிருக்கலாம் என அஞ்சப்படுகிறது. இலட்சக்கணக்கானோர் மர்மக் காய்ச்சலால் பாதிக்கப்பட்ட நிலையில் இது மிகப்பெரிய கோவிட் அலையில் அறிகுறியாக இருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

வட கொரியா ஏற்கனவே பெரும் பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டு வருகிறது. இந்நிலையில் அங்கு கொவிட் அலை தீவிரமானால் நாட்டுக்கு உணவு உள்ளிட்ட பொருட்களை எடுத்துச் செல்வது மேலும் கடினமாகும். இது மோசமான உணவுப் பஞ்சத்துக்கு வழிவகுக்கும் சுட்டிக்காட்டப்படுகிறது.

இதேவேளை, நெருக்கடியில் சிக்கியுள்ள வட கொரியாவுக்கு மனிதாபிமான உதவியை வழங்கத் தயார் என தென் கொரியா கடந்த வியாழக்கிழமை அறிவித்தது. எனினும் இதற்கு வட கொரியா இன்னும் பதிலளிக்கவில்லை. (அ)

# ஹெய்ட்டி குடியேற்றவாசிகள் பயணித்த கப்பல் புவேர்ட்டோ ரிக்கோ அருகே மூழ்கி 11 பேர் பலி!

போர்ட் ஒ பிரின்ஸ்,மே 14

ஹெய்ட்டி சட்டவிரோத குடியேற்றவாசிகளை ஏற்றிச் சென்ற கப்பல் ஒன்று அமெரிக்காவின் சுயாட்சிப் பிரதேசமான புவேர்ட்டோ ரிக்கோ அருகே நேற்று முன் தினம் கடலில் கவிழ்ந்ததில் குறைந்தது 11 பேர் நீரில் மூழ்கி உயிரிழந்தனர். 31 பேர் உயிருடன் மீட்கப்பட்டனர்.

ஆபத்தான, சட்டவிரோத கடல் பயணங்களை மேற்கொண்டு அமெரிக்காவை நோக்கி பயணிக்கும் புலம் பெயர்வோர் எண்ணிக்கை அதிகரித்து வரும் நிலையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக அமெரிக்க கடலோர காவல் படை தெரிவித்துள்ளது.

புவேர்ட்டோ ரிக்கோவின் டெசேசியோ தீவுக்கு வடக்கே 10 கடல் மைல் தொலைவில் இந்தக் கப்பல் மூழ்கியது. இதில் மொத்தம் எத்தனை பேர் இருந்தனர் என்பது உடனடியாகத் தெரியவில்லை. 11 பேர் உயிரிழந்தது உறுதி செய்யப்பட்டது. 31 பேர் மீட்கப்பட்டுள்ளனர் என அமெரிக்க கடலோர காவல் படை ருவிட்டரில் தெரிவித்துள்ளது.

கடலில் மூழ்கி காணாமல் போயுள்ளவர்களை தேடி மீட்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. தேடுதல் பணியில் கடலோர காவல்படை ஹெலி கொப்டர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன என அமெரிக்க கடலோர காவல் படை செய்தித் தொடர்பாளர் ரொய்ட்டர்ஸிடம் தெரிவித்தார்.

மீட்கப்பட்டவர்கள் புவேர்ட்டோ ரிக்கோவுக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர். அவர்களில் எட்டு பேர் உள்ளூர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்று அமெரிக்காவின் பொது விவகார அதிகாரி ஜெப்ரி குயினோன்ஸ் தெரிவித்தார்.

ஹெய்ட்டியில் சமீபத்திய மாதங்களில் வன்முறைகள் அதிகரித்து வருகின்றன. அத்துடன், அங்கு வறுமை மோசமாக உள்ளது. இந்நிலையில் அங்கிருந்து ஆபத்தான பயணங்களை மேற்கொண்டு மக்கள் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு தப்பிச் செல்லும் நிலை அதிகரித்துள்ளது குறிப்பிடத்தக்கது. (அ)





# சீனாவில் ஓடுபாதையில் தீப்பிடித்தது விமானம்!

பீஜிங், மே 14

சீனாவில் ஓடுபாதையில் புறப்பட தயாரான விமானம் நேற்று முன் தினம் காலை தீப்பிடித்து எரிந்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

சோங்கிங் ஜியாங் சர்வதேச விமான நிலையத்திலிருந்து நேற்று முன் தினம் காலை 8 மணியளவில் திபெத் எயார்லைன்ஸ் விமானம் 113 பயணிகள், 9 ஊழியர்களுடன் புறப்பட்டது.

ஓடுபாதையில் சிறிது தூரம் சென்ற விமானம் திடீரென்று தீப்பற்றி எரிந்துள்ளது. இந்த விபத்தை அறிந்த விமானிகள், விமானத்தை உடனடியாக நிறுத்தி பயணிகள் அனைவரையும் உடனடியாக வெளியேற்றியதால் பெரிய அளவிலான விபத்து தவிர்க்கப்பட்டுள்ளது.

இந்த விபத்தில் சில பயணிகளுக்கு சிறு காயம் ஏற்பட்டதால், அவர்கள் சிகிச்சைக்காக மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். விமானத்தில் ஏற்பட்ட தீயை தீயணைப்பு பிரிவினர் அணைத்தனர்.

முதற்கட்ட விசாரணையில், விமானம் ஓடுபாதையை விட்டு விலகி புல்வெளிக்கு சென்றதால் தீ விபத்து ஏற்பட்டதாக தகவல் வெளியாகியுள்ளன. (அ)

ஈழநாடு



# சென்னையின் இறுதி சுற்று கனவை தகர்த்தது மும்பை!




மும்பை, மே 14

97 ஓட்டங்களுக்கு சுருண்ட சென்னை அணியை 5 விக்கெட்களால் வெற்றி கொண்டது மும்பை இந்தியன்ஸ் அணி. இந்த தோல்வியால் சென்னை அணிக்கு சற்று குறைவாக இருந்த இறுதிச்சுற்று வாய்ப்பையும் மும்பை அணி தகர்த்தது.

ஐ. பி. எல். தொடரில் நேற்று முன்தினம் நடந்த 59 ஆவது போட்டியில் சென்னை சுப்பர் கிங்ஸ், மும்பை இந்தியன்ஸ் அணிகள் மோதின.

இந்தப் போட்டியில் ஏற்பட்ட மின்தடை சென்னை அணிக்கு பெரும் பின்னடைவாக மாறியது. இதனால், மீளாய்வு கட்டமைப்பு (டி. ஆர். எஸ்) இரு ஓவர்கள் இயங்கவில்லை. இது அந்த அணிக்கு பாதிப்பை உருவாக்கியது.

இந் நிலையில் டானியல் சாம்ஸ் வீசிய முதலாவது ஓவரில் சென்னையின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் டெவன் கொன்வே எல். பி. டபிள்யூ. முறையில் ஆட்டமிழந்தாரென கள மத்தியஸ்தர் சிரா ரவிகாந்த்ரெட்டி தீர்ப்பு வழங்கினார். டி. ஆர். எஸ். முறை தற்காலிகமாக செயலிழிந்திருந்ததால் கொன்வேயால் மீளாய்வை கோரமுடியாமல் போனது.

அடுத்த ஓவரில் பும்ராவின் பந்துவீச்சில் ரொபின் உத்தப்பா எல். பி. டபிள்யூ. முறையில் ஆட்டமிழந்தாரென கள மத்தியஸ்தர் கிறிஸ் கஃப்பானி தீர்ப்பு வழங்கினார். இந்த ஆட்டமிழப்பிலும் டி. ஆர். எஸ்.ஐ கோர முடியவில்லை. ஆனால், சலன அசைவுகளில் கொன்வெயின் கால் தடுப்பு மட்டையில் பட்ட பந்து விக்கெட்டுக்கு இடப்புறமாக அப்பால செல்வது தெளிவாக தெரிந்தது.

உத்தப்பாவின் கால்தடுப்பில் பட்ட பந்து விக்கெட்டில் படுமா இல்லையா என்பது தெளிவாக இருக்கவில்லை. அந்தப் பந்து ஓவ் ஸ்டம்பில் பட்டும் படாமலும் செல்லக்கூடியதாக இருந்தது. இந்த இரண்டு ஆட்டமிழப்புகளும் சென்னை சுப்பர் கிங்ஸ் இறுதிச் சுற்றுக்கு முன்னேற முடியாமல் செய்தது.

இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாட அழைக்கப்பட்ட சென்னை சுப்பர் கிங்ஸ் 16 ஓவர்களில் சகல விக்கெட்களையும் இழந்து 97 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது.

முதல் 2 ஓவர்களில் கொன்வே (0), மொயீன் அலி (0), ரொபின் உத்தப்பா (1) ஆகியோரின் விக்கெட்களை இழந்த சென்னை சுப்பர் கிங்ஸ், பவர் ப்ளே முடிவில் 5 விக்கெட்கள் இழப்புக்கு 32 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. ருதுராஜ் கெய்க்வாட் (7), அம்பதி ராயுடு (10) ஆகிய இருவரும்கூட பவர் ப்ளேக்குள் ஆட்டமிழந் தனர்.

8ஆவது ஓவரில் ஷிவம் டுபே 10 ஓட்டங்களுடன் 6ஆவதாக ஆட்டமிழக்க மொத்த எண்ணிக்கை 39 ஓட்டங்களாக இருந்தது. இந்நிலையில் தனி ஒருவராக போராடிய அணித் தலைவர் எம்.எஸ். டோனி, 7ஆவது விக்கெட்டில் டுவைன் பிராவோவுடன் 39 ஓட்டங்களைப் பகிர்ந்தார்.

இதுவே சென்னை சுப்பர் கிங்ஸ் இன்னிங்ஸில் சிறந்த இணைப்பாட்டமாக அமைந்தது. பிராவோ 12 ஓட்டங்களைப் பெற்றதுடன் அடுத்துவந்த சிம்ரஜீத் சிங் (2), மஹீஷ் தீக்ஷன (0), முக்கேஷ் சௌதரி (4) ஆகியோர் விரைவாக ஆட்டமிழந்தனர்.

டோனி 39 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதிருந்தார்.

மும்பை இந்தியன்ஸின் பந்துவீச்சில் டானியல் சாம்ஸ் 16 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களையும் குமார் கார்த்திகேயா 22 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் ரைலி மெரெடித் 27 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய மும்பை இந்தியன்ஸ் 14.5 ஓவர்களில் 5 விக்கெட்களை இழந்து 103 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டியது.

ஆரம்ப வீரர்களான இஷான் கிஷன் (6), அணித் தலைவர் ரோஹித் ஷர்மா (18) ஆகிய இருவரும் மீண்டும் துடுப்பாட்டத்தில் பிரகாசிக்கத் தவறினர்.

டானியல் சாம்ஸ் (1), ட்ரைஸ்டன் ஸ்டப்ஸ் (0) ஆகிய இருவரும ஆடுகளம் நுழைந்த சொற்பநேரத்தில் ஆட்டமிழந்து வெளியேறினர்.

திலக் வர்மா, ஹ்ரிதிக் ஷொக்கின் (18) ஆகிய இருவரும் 5ஆவது விக்கெட்டில் 48 ஓட்டங்களைப் பகிர்ந்து மும்பை இந்தியன்ஸுக்கு நம்பிக்கை ஊட்டினர்.

திலக் வர்மா (34 ஆ.இ.), டிம் டேவிட் (16 ஆ.இ.) ஆகியோர் திறமையாகத் துடுப்பெடுத்தாடி மும்பையின் வெற்றியை உறுதிசெய்தனர்.

பந்துவீச்சில் முகேஷ் சௌதரி 23 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களைக் கைப்பற்றினார். (ஐ)

# ஐ. பி. எல். தொடரிலிருந்து பட் கம்மின்ஸ் விலகினார்!

மும்பை, மே 14

நடப்பு ஐ. பி. எல். தொடரின் மீதமுள்ள போட்டி களிலிருந்து பிரபல ஆஸி. வீரர் பட் கம்மின்ஸ் விலகி யுள்ளார்.


ஐ. பி. எல். ஏலத்தில் ஆஸி. டெஸ்ட் அணியின் தலை ஶ்ரீவரான பட் கம்மின்ஸை 7.25 கோடி இந்தய ரூபாய்க்கு கொல்கத்தா அணி எடுத்தது.

இம்முறை தொடரில், 5 போட்டிகளில் மட்டும் விளையாடிய கம்மின்ஸ், 7 விக்கெட்களை எடுத்தார். மும்பைக்கு எதிராக அதிரடியாக விளையாடி ரசிகர்களைக் கவர்ந்தார் கம்மின்ஸ். அன்றைய ஆட்டத்தில் கொல்கத்தா அணியின் வெற்றிக்கு 33 பந்துகளில் 46 ஓட்டங்கள் தேவை என்கிற நிலையில் மறக்க முடியாத அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தினார் கம்மின்ஸ்.

இந்த வருட ஐ. பி. எல். போட்டியில் அதுதான் அவருடைய முதல் ஆட்டம். டானியல் சாம்ஸ் வீசிய 16ஆவது ஓவரில் 4 சிக்ஸர்கள், 2 பௌண்ட்ரிகள் அடித்து 4 ஓவர்கள் மீதமுள்ள நிலையில் தனது அணிக்கு வெற்றியைத் தேடித் தந்தார். 15 பந்துகளில் 6 சிக்ஸர்கள், 4 பௌண்ட்ரிகளுடன் 56 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தார்.

ஐ. பி. எல். போட்டியில் குறைந்த பந்துகளில் (14) அரைச் சதம் அடித்த சாதனையைச் சமன் செய்தார் கம்மின்ஸ். ஐ. பி.எல். போட்டியில் 15 பந்துகளில் அதிக ஓட்டங்கள் எடுத்தவர்களில் கம்மின்ஸுக்கே முதல் இடம்.

இந்நிலையில் இடுப்புப் பகுதியில் ஏற்பட்ட காயம் காரணமாக அவர் மீதமுள்ள போட்டிகளிலிருந்து விலகியுள்ளார். (ஐ)






# இங்கிலாந்து அணியின் பயிற்றுநராக மக்கலம்!

லண்டன், மே 14

இங்கிலாந்து டெஸ்ட் கிரிக்கெட் அணியின் புதிய பயிற்றுநராக நியூசிலாந்தின் முன்னாள் தலைவர் பிரெண்டன் மக்கலம் நியமிக்கப்பட்டுள்ளார். இந்த நியமனத்தை இங்கிலாந்து கிரிக்கெட் சபை உத்தியோகபூர்வமாக உறுதிப்படுத்தியது.

இங்கிலாந்துக்கும் நியூசிலாந்துக்கும் இடையில் லோர்ட்ஸ் விளையாட்டரங்கில் ஜூன் 2ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள ஐ. சி. சி. உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் முதலாவது டெஸ்ட் போட்டியில் தனது பயிற்றுநர் பதவியை 40 வயதான மக்கலம் ஆரம்பிப்பார்.

அவுஸ்திரேலியாவில் ஆஷஷ் தொடரில் அடைந்த படுதோல்வியை அடுத்து கடந்த பெப்ரவரி மாதம் பயிற்றுநர் பதவியை இராஜிநாமா செய்த கிறிஸ் சில்வர்வூடுக்குப் பதிலாகவே புதிய பயிற்றுநராக மக்கலம் நியமிக்கப்பட்டுள்ளார்.

புதிய அணித் தலைவர் பென் ஸ்டோக்ஸுடன் இணைந்து வெற்றிகரமான சகாப்தத்தை நோக்கி இங்கிலாந்து அணியை முன்னேற்றுவதை குறிக்கோளாகக் கொண்டு செயல்படவுள்ளாரென மக்கலம் தெரிவித்தார்.

“இந்தப் பதவியை ஏற்கும் நிலையில் அணி தற்போது எதிர்கொள்ளும் குறிப்பிடத்தக்க சவால்களை நான் நன்கு அறிவேன். நாங்கள் அவர்களை நேருக்கு நேர் சந்தித்தவுடன் எனது திறமையைக் கொண்டு அணியை ஒரு பலம்வாய்ந்த சக்தியாக உருவாக்க முடியும் என நான் உறுதியாக நம்புகின்றேன்“ எனவும் மக்கலம் தெரிவித்தார். (ஐ)



# இத்தாலி ஓப்பன் ரென்னிஸ் அரையிறுதியில் சபலென்கா!

ரோம், மே 13

இத்தாலியன் ஓப்பன் ரென்னிஸ் தொடரில் பெலாரஸின் சபலென்கா அரையிறுதிக்கு முன்னேறினார்.

இத்தாலியன் ஓப்பன் ரென்னிஸ் தொடர் கடந்த 7ஆம் திகதி இத்தாலியின் ரோமில் ஆரம்பமானது.

இந்தத் தொடரில் நேற்று நடந்த காலிறுதிப் போட்டியில், அமெரிக்காவின் அனிசிமோவாவை எதிர்கொண்டார் சபலென்கா.

மிகக் கடுமையான போட்டியாக இந்தப் போட்டி அமைந்தது. முதல் செற்றில் சபலென்கா 4 - 6 என்ற கணக்கில் தோல்வியை சந்தித்தார்.

ஆனால், அடுத்த இரு செற்களிலும் எழுச்சி கண்ட சபலென்கா 6 - 3, 6 - 2 என்ற கணக்கில் வெற்றி பெற்றார். (ஐ)

# அரசிலிருந்து விலகிய 10 கட்சிகளும் சுயாதீனமாகச் செயற்பட தீர்மானம்

## விமல் வீரவன்ஸ அறிவிப்பு



**கொழும்பு, மே 14**

**அரசாங்கத்தில் இருந்து விலகிய 10 கட்சிகளும், தொடர்ந்தும் பாராளுமன்றில் சுயாதீன அணியாக செயற்பட தீர்மானித்துள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.**

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பிரதமர் பதவிக்கு ரணில் விக்ரமசிங்கவை நியமிப்பதன் மூலம் ஸ்திரத்தன்மை ஏற்படும் என்பதில் சுயாதீன பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு நம்பிக்கை இல்லை.

இந்த நெருக்கடிக்கு ரணில் விக்கிரமசிங்கவும் பொறுப்பு கூற வேண்டும். அவரது 4 வருடகால ஆட்சியின்போது 12 பில்லியன் அமெரிக்க டொலர் மதிப்புள்ள கடன்கள் பெறப்பட்டன.

முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ சில வாரங்களுக்கு முன்னர் பதவி விலகியிருந்தால், அவர் தலைமறைவாகும் நிலைக்குத் தள்ளப்பட்டிருக்க மாட்டார். அவர் இதற்கு முன்னர் பதவியில் இருந்து விலகியிருந்தால், அவரது விசுவாசிகள் வன்முறைக்கு ஆளாகியிருக்கமாட்டார்கள்.

ஜோன்ஸ்டன்பெர்னாண்டோ, ரோஹித அபே குணவர்தன, சனத் நிஷாந்த போன்றவர்கள் மஹிந்த ராஜ பக்ஷவை அமைதியான முறை யில் பதவி விலக அனுமதிக்க வில்லை.

அவரை பதவி விலகுமாறு நாங்கள் கோரினோம். ஏனெனில் இந்த நிலைமை ஏற்படும் என்பதை நாம் அறிந்திருந்தோம். பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பதவி விலக மறுத்ததால், நெருக்கடி தொடர்ந்து, மிக பயங்கரமான முடிவுக்கு வழி வகுத்தது. புதிய இடைக்கால அரசாங்கத்தை அமைப்பதற்காக சுயாதீன பாராளுமன்ற உறுப்பினர்கள் ஏறக்குறைய அனைத்து அரசியல் கட்சிகளுடனும் கலந்துரையாடல்களை நடத்தினோம். எனினும் துரதிஷ்டவசமாக அந்த கட்சிகள் எதுவும் சாதகமான பதிலை வழங்கவில்லை-என்றார். (அ)

# பஸ்களுக்கு தீ வைத்தமை பயங்கரவாத செயற்பாடு!

கொழும்பு, மே 14

சமீபத்தில் காலிமுகத்திடலில் இடம்பெற்ற மோதல் சம்பவத்தைத் தொடர்ந்து நாட்டின் பல பகுதிகளிலும் தனியார் பஸ்களுக்கு தீ வைக்கப்பட்ட சம்பவமானது ஒரு பயங்கரவாதச் செயற்பாடாகும் என தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் கெமுனு விஜேரத்ன தெரிவித்தார்.

நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் வைத்து அவர் இதனை கூறினார்.

தொடர்ந்து கருத்து வெளியிட்ட அவர், இந்த சம்பவம் தொடர்பில் அவதானம் செலுத்துமாறு பொலிஸ்மா அதிபரிடம் கேட்டுக்கொள்வதாகவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# பெரமுன தேசிய பட்டியலில் ஐ.தே.க.வின் உறுப்பினர்கள்?

கொழும்பு, மே 14

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிநிதிகள் குழுவொன்றை பாராளுமன்றத்துக்கு அழைத்து செல்வதற்கு அந்தக் கட்சி தயாராகி வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய பட்டியல் பாரா ளுமன்ற உறுப்பினர்கள் குழு பதவி விலகி, அவர்களுக்கு பதிலாக ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுவொன்றை நியமிக்க ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. காலி முகத்திடலில் போராட் டத்தில் ஈடுபடுவோர் இத்தக வலை ஊடகவியலாளர்கள் சந் திப்பின்போது தெரிவித் ததாக கொழும்பு செய்திகள் கூறுகின்றன. (அ)

# 15ஆம் திகதி மின்துண்டிப்பு இல்லை!

கொழும்பு, மே 14

வெசாக் தினத்தை முன்னிட்டு எதிர்வரும் 15ஆம் திகதி நாடளாவிய ரீதியில் மின்துண்டிப்பு மேற்கொள்ளப்படமாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தலைவர் இதனைத் தெரிவித்தார். (அ)

# முகநூல் ஊடாக வன்முறையை தூண்டிய முன்னாள் இராணுவ அதிகாரி கைதானார்

கொழும்பு, மே 14

முப்படையினர் மற்றும் பொலிஸ் அதிகாரிகளின் வீடுகளுக்கு சேதத்தை ஏற்படுத்துமாறு கூறி, முகநூலில் பதிவு ஒன்றை செய்து, மக்களின் ஆத்திரத்தை தூண்டினார் என்ற குற்றச்சாட்டில் தேசிக குருப்பு என்ற நபர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

நிட்டம்புவை பொலிஸார் இந்த நபரை கைது செய்துள்ளனர்.

இந்த சந்தேக நபர் இராணுவத்தில் லெப்டினன்ட் தர அதிகாரியாக கடமையாற்றிய போது, இராணுவ ஒழுக்கத்துக்கு விரோதமாக செயற்பட்ட காரணத்தினால் கடந்த 2020 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 29 ஆம் திகதி இராணுவத்தில் இருந்து நீக்கப்பட்ட நபர் என்பதை இலங்கை இராணுவம் உறுதிப்படுத்தியுள்ளது.

2010 ஆம் ஆண்டில் இராணுவத்தில் இணைந்துக் கொண்ட இவர் தனது கட்டளை அதிகாரியின் கையெழுத்தை போலியாக பயன்படுத்தினார் என்ற குற்றச்சாட்டில் இராணுவத்தில் இருந்து நீக்கப்பட்டுள்ளார்.

கடந்த சில நாட்களில் கலவரமாக செயற்பட்டு சொத்துக்களுக்கு சேதங்களை ஏற்படுத்திய நபர்களை தூண்டிவிடும் வகையில் முகநூல் பதிவை இட்டுள்ளதுடன் அதில் இராணுவம் மற்றும் பொலிஸ் உயர் அதிகாரிகளின் வீடுகள் குறித்து கவனம் செலுத்துமாறும் கூறியுள்ளார்.

சந்தேக நபர் நிட்டம்புவ பொலிஸ் நிலையத்தில் சரணடைந்த பின்னரே அவரை பொலிஸார் கைது செய்துள்ளனர். சம்பவம் குறித்து நிட்டம்புவ பொலிஸார் மேலதிக விசார ணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# 21 ஆவது அரசமைப்பு திருத்தம் 2 மாதங்களுக்குள் நிறைவேறும்

கொழும்பு, மே 14

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான புதிய அரசு பதவியேற்று இரண்டு மாதங்களுக்குள் அரசியலமைப்பின் 21 ஆவது சட்ட திருத்தம் நிறைவேற்றப்படவுள்ளதாக சிங்கள நாளேடு ஒன்றின் இணையத்தளத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக நேற்று வெள்ளிக்கிழமை அந்த இணையத்தளத்தில் வெளியான செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

சுயாதீன ஆணைக்குழுக்களுக்கு அதிகாரமளித்தல் மற்றும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட அரச தலைவர் முறைமையின் அதிகாரங்களைக் குறைக்கும் அரசியலமைப்பின் 19 ஆவது சட்ட திருத்தத்தின் அம்சங்களை உள்ளடக்கி அரசியலமைப்பின் 21 ஆவது சட்ட திருத்தம் நிறைவேற்றப்பட உள்ளது.

சிறிலங்கா பொதுஜன பெரமுன, ஐக்கிய மக்கள் சக்தியின் அரசுக்கு ஆதரவான குழு மற்றும் கடந்த அரசில் இருந்து சுயாதீனமான குழு உட்பட பல கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்கள் 21 ஆவது அரசியலமைப்பு சட்ட திருத்தத்தை நிறைவேற்றுவதற்கு ஆதரவு தெரிவித்துள்ளதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன-என்றுள்ளது. (அ)

# மரண அறிவித்தல்



தோற்றம் 09 - 12 - 1940

மறைவு 11 - 05 - 2022

## பொன்னையா பரமேஸ்வரன் (சிவம்)

மலேசியாவைப் பிறப்பிடமாகவும், யாழ். சிறுப்பிட்டி திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா பரமேஸ்வரன் அவர்கள் 11-05-2022 புதன்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான பொன்னையா நாகம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் கனகம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும்,பராசக்தி(பரா) அவர்களின் ஆருயிர்க் கணவரும்,காலஞ்சென்ற சரஸ்வதி அவர்களின் அன்புச் சகோதரரும்,சுகன்(மோகன்- கொலண்ட்), ஜெயந்தி (ஜேர்மனி), குகன்(டென்மார்க்), கண்ணன், குமாரதாசன்(குமார்-ஜேர்மனி), யசோதா(லண்டன்), சுஜாதா(ஜேர்மனி), சுஜீதா(ராதா-ஜேர்மனி), ஜெயபாரதி(லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும்,விஜயலக்ஸ்மி(கொலண்ட்), கணேசலிங்கம்(ஜேர்மனி), ஜெயலக்ஸ்மி (டென்மார்க்), அஜந்தினி(ஜேர்மனி), ஸ்ரீறி கண்ணதாஸ் (லண்டன்), ஆதவன்(ஜேர்மனி), காலஞ்சென்ற பிரபாகர்(ஜேர்மனி), பிரதீபன்(லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும்,பிரணவன், சரவணன், சிவகாமி, ஜெயமேகலா, ஹரிசன், நிவேதன், ஜெயபிரசாந், ஜெயபிரவீணா, ஜெயபிரவீண், பௌசியா(பூஜா), அரவிந்த், லக்சயன், பிரக்கியா, ஜெயமயூரன், அஸ்வினி, ஜெயசாந்த், சாருசன், கயேந்தினி, கார்த்திகா, சஜீவன், ஹனுசா, பவ்யா, லக்ஷயா, பிரஜீன், காசினி, விகிர்தன் ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்ற சற்குணநாதன், தங்கபொன்(கொலண்ட்), சோமாவதி (லண்டன்), யோகேஸ்வரி(ஜேர்மனி), காலஞ்சென்ற பூதத்தம்பி ஆகியோரின் அன்பு மைத்துனரும்,இந்திரதேவி(லண்டன்), குமாரசாமி (கொலண்ட்), காலஞ்சென்ற தளையசிங்கம், உலகநாதன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகலனும்,பாலேந்திரன், விஜயா, கண்ணன், புஸ்பா, சிவகுமாரன், பாஸ்கரன், துஷாகரன், தயாளன், வித்தியா ஆகியோரின் அன்பு மாமனாரும்,தீபாகரன், கிருபாகரன், ரூபாகரன், கயேந்திரன், சுயேந்திரன், ஜெயபிரியா, ஜனர்தனன், ஜெகனிவாசன் ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியை பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு:

**பராசக்தி - மனைவி** Mobile : +94765924757

**மோகன் - மகன்** Mobile : +31623427753

**கண்ணன் - மகன்** Mobile : +4591411067

தகவல் :
**மோகன் (மகன்).**

## பிரதமர்...

சுதந்திரக் கட்சி மற்றும் தனித்து இயங்கும் 10 கட்சிகளை சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் குழு என்பன ரணிலை ஆதரிப்பதில்லை என்று அறிவித்துள்ளன.

இதேபோன்று கடந்த காலத்தில், ரணில் தலைமையிலான அரசாங்கங்களுக்கு ஆதரவு வழங்கி வந்த முஸ்லிம் கட்சிகளான ஹக்கீம் தலைமையிலான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ரிஷாத் பதியுதீன் தலைமையிலான அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், இராதகிருஷ்ணன் தலைமையிலான மலையக மக்கள் முன்னணி என்பனவும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளன. அத்துடன், இந்தக் கட்சிகள் ஐக்கிய மக்கள் சக்தியுடனேயே தொடர்ந்து பயணிக்கப்போவதாகவும் அறிவித்துள்ளன.

இந்நிலையில், சிறுபான்மை கட்சிகளான இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ. பி. டி. பி.) என்பன மட்டுமே பகிரங்கமாக தமது ஆதரவை வெளிப்படுத்தியுள்ளன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது நிலைப்பாட்டை தெளிவாகத் தெரிவிக்காத போதிலும், அமைச்சுப் பதவிகள் எதையும் பொறுப்பேற்கப் போவதில்லை என்று கூறியுள்ளது.

ரணில் விக்கிரசிங்க பெரும்பான்மை பெறுவதை உறுதிப்படுத்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னாள் அமைச்சர்களை தனியாகவும் பெரமுன கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களையும் இன்று தனித்தனியாக சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார். எனினும், ரணில் விக்கிரசிங்கவுக்கு ஆதரவு வழங்குவது தொடர்பில் இரு வேறுபட்ட நிலைமையே அந்தக் கட்சிக்குள் நிலவுகிறது எனத் தெரிய வருகின்றது.

இந்நிலையில், எதிர்வரும் 17ஆம் திகதி பாராளுமன்றம் கூடும்போது ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றில் தமது பெரும்பான்மையை நிரூபிக்கவேண்டிய தேவையுள்ளது. இந்நிலையில் அவர் பெரும்பான்மையை எட்டுவதில் சந்தேகம் எழுந்துள்ளது. (ஐ)

## ராஜபக்ஷக்களை...

சிங்க தெரிவித்தார்.

“பெரும் பொருளாதார நெருக்கடிகளால் நாட்டு மக்கள் மூன்று வேளைகளிலும் உணவை உட்கொள்ள முடியாத அவல நிலை ஏற்பட்டுள்ளது. மக்களின் வயிற்றுப் பசிக்கு உடனடியாகத் தீர்வு காண்பதே எனது குறிக்கோள்” என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

நேற்றைய தினம் தனது கடமைகளை பொறுப்பேற்ற பின்னர் ஊடகங்களிடம் பேசியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், “நாட்டையும் மக்களையும் மீட்டெடுக்கவே பிரதமர் பொறுப்பை ஏற்றேன். அதற்காக அனைத்துக் கட்சிகளினதும் ஒத்துழைப்பையும் ஆதரவையும் நான் எதிர்பார்க்கின்றேன்.

இலங்கைக்கு வெளிநாடுகள் உதவ முன்வந்துள்ளன. எனவே, பொருளாதார நெருக்கடிக்கு நாம் விரைந்து தீர்வுகாண முடியும். துயரங்களிலிருந்து மக்களை மீட்டெடுக்க முடியும்.

உண்மையான மக்கள் பிரதிநிதிகள் எனது வேலைத்திட்டங்களுக்கு ஆதரவை வழங்க வேண்டும்” - என்றார். (ஐ)

## இலங்கைக்கு...

போது இலங்கைக்கு தேவையான உதவிகள் குறித்து ஆராயப்பட்டன. இந்திய தூதுவர் நிதியுதவி ஒன்றை வழங்குவது குறித்து பிரதமருக்கு உறுதியளித்தார். இதேசமயம், சீனத் தூதுவர் இலங்கைக்கு கடந்த காலத்தில் வழங்கப்பட்ட உதவிகளை சுட்டிக்காட்டியதுடன், கோரிக்கை விடுக்கப்பட்டு நிலுவையிலுள்ள நிதியுதவிகள் குறித்து மீளாய்வு செய்வதாக உறுதியளித்தார்.

ஜப்பான் தூதுவர் இலங்கையின் பொருளாதாரத்தை நிலைநிறுத்த தொடர்ந்தும் ஆதரவளிக்கப்படும் என்று கூறியதுடன், அது குறித்து உரையாடுவதற்காக இன்று சனிக்கிழமை அவர் ரோக்கியோவுக்கு பயணமாகிறார்.

பிரதமருடனான இந்த உரையாடலின் போது, ஐரோப்பிய ஒன்றியம், அமெரிக்கா, இந்தியா, ஜப்பான் நாடுகள் கூட்டு நிதியம் ஒன்றின் மூலமாக இலங்கைக்கு உதவிகளை வழங்குவதற்கான ஏற்பாடுகளை செய்வதாக உறுதியளிக்கப்பட்டது.

இதேசமயம், பிரித்தானியா தூதுவர் எந்த உத்தரவாதத்தையும் அளிக்காத போதிலும் இங்கிலாந்து செல்லும் அவர் அரசாங்கத்துக்கு இலங்கையின் நிலைமை குறித்து விவரிப்பார் என்றும் தெரிய வருகின்றது. (ஐ)

## மஹிந்த...

கோட்டை நீதிவான் நீதிமன்றில் நேற்று இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. இதனை, சட்டத்தரணி சேனக பெரேரா 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க குற்றவியல் நடைமுறை சட்டக் கோவையின் 136 (1) ( அ) அத்தியாயத்தின் கீழ் தனிப்பட்ட மனுவாக (ப்ரிவடெ ப்லைன்ட்) தாக்கல் செய்துள்ளார்.

முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, முன்னாள் அமைச்சர்களான ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, சனத் நிசாந்த பாராளுமன்ற உறுப்பினர் சஞ்ஜீவ எதிரிமான்ன, மொறட்டுவை நகர சபை தலைவர் சமன் லால் பெர்னாண்டோ, மேல் மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன், பொலிஸ் மா அதிபர் சி.டி. விக்ரமரத்ன ஆகியோரையே கைது செய்ய உத்தரவிடுமாறு அவர் தனது மனுவில் கோரியுள்ளார். (ஐ)

## ரணிலின்...

யின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார எம்.பி. தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று விசேட ஊடகவியலாளர் மாநாட்டை நடத்தி ஐக்கிய மக்கள் சக்தியின் நிலைப்பாட்டை அவர் அறிவித்துள்ளார்.

இதேவேளை, ரணில் விக்கிரமசிங்க பிரதமராகப் பொறுப்பேற்றாலும் அவருக்கு பாராளுமன்றத்தில் பெரும்பான்மை இல்லை என்றும் ரஞ்சித் மத்தும பண்டார குறிப்பிட்டார்.

இதனால் முடிந்தால் பெரும்பான்மையைக் காட்டுமாறு ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஐக்கிய மக்கள் சக்தி சவால் விடுப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ)

## மக்கள்...

ருவான் விஜயவர்த்தன நியமிக்கப்பட்டுள்ளார். உரப் பிரச்னை தொடர்பில் ஆராய்வதற்காக அகில விராஜ் காரியவசம் நியமிக்கப்பட்டுள்ளார்.

சாகல காரியவசம் எரிபொருள் பிரச்னை தொடர்பில் ஆராய்வதற்காக நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த குழுக்கள் குறித்த தரப்பினருடன் கலந்துரையாடி பிரச்னைகளை தீர்ப்பதற்காக யோசனைகளை முன்வைக்கவுள்ளனர் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் பாலித்த ரங்கே பண்டார கூறினார். (ஐ)

## மின் கட்டணம்...

பீடு செய்யப்படுகின்றது என்றும் அவர் கூறினார்.

எது எப்படி இருப்பினும், அரசாங்கம் கொள்கை வழிகாட்டுதல்களை வழங்கியவுடன் மின்சார கட்டணத்தை அதிகரிக்கும் முடிவை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு எடுக்கும் என்றும் தெரிவித்தார். (ஐ)

## இன்று 12...

இதேசமயம் இன்று மாலை 6 மணிக்கு நடைமுறைப்படுத்தப்படும் ஊரடங்கு சட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 5 மணிக்கு நீக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# ஒரே நாளில் பங்கு சந்தை 4 வீதத்துக்கு மேல் உயர்வு

கொழும்பு, மே 14

இலங்கையின் பிரதான பங்குச் சந்தை சுட்டெண் நேற்று 4 வீதத்துக்கு மேல் அதிகரித்தது.

பிரதமராக ரணில் விக்கிரமசிங்க நியமிக்கப்பட்டமைதை தொடர்ந்து அரசியல் ஸ்திரதன்மை ஏற்படும் என்ற நம்பிக்கையின் விளைவாகவே இந்த உயர்வு ஏற்பட்டதாக பங்கு சந்தை சார்ந்தவர்கள் தெரிவித்தனர்.

ரணில் விக்கிரமசிங்க ஆறாவது முறையாகப் பிரதமராக நேற்று முன்தினம் வியாழக்கிழமை பதவியேற்றார். அவரின் அமைச்சரவை இன்னமும் அமையவில்லை. இந்நிலையில், அனைத்து பங்கு விலை குறியீடு 4.43வீதமாக அல்லது 343.79 புள்ளிகள் உயர்ந்தது. ஏப்ரல் 8ஆம் திகதிக்கு பின்னர் 8,098.41 என்ற நிலையை பங்கு சந்தை சுட்டெண் எட்டுவது இதுவே அதிக பட்சமாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

# பாராளுமன்ற உறுப்பினர்களை ரணில் விலைக்கு வாங்குகிறார்!

## ஜே. வி. பி. தலைவர் சாடல்

கொழும்பு, மே 14

நல்லாட்சி அரசாங்கத்தில் மைத்திரிபால சிறிசேன செய்த சூழ்ச்சியையே தற்போது கோட்டாபய ராஜபக்ஷவும் செய்துள்ளார். எவ்வாறிருப்பினும் பாராளுமன்ற உறுப்பினர்களை விலைக்கு வாங்கி அவர் பெரும்பான்மையைப் பெற்றுக் கொள்வதற்கான முயற்சிகளில் தற்போது ஈடுபட்டுள்ளதாக தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன என்று மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி.) தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

ஜே.வி.பி. தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

நாட்டு மக்களின் குரல், போராட்டங்கள் என எவற்றையும் கவனத்தில் கொள்ளாமல் ஜனாதிபதி இந்த தீர்மானத்தை எடுத்துள்ளார்.

எனவே இது செல்லுபடியற்ற நியமனமாகும்.

பாராளுமன்றத்திற்குச் செல்வதற்கான வாக்குகளைக் கூட தேர்தலில் பெற்றுக் கொள்ள முடியாத மக்கள் நிராகரிக்கப்பட்ட ரணில் விக்கிரமசிங்க, எவ்வாறு பிரதமராக பதவியேற்க முடியும்? ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் ரணில் விக்கிரமசிங்கவும் ஒருவரை ஒருவர் நம்பிக் கொண்டிருக்கின்றனர். ஆனால், மக்கள் அவர்கள் இருவரையுமே நம்பவில்லை.

2018 நல்லாட்சி அரசாங்கத்தின் போது மைத்திரிபால சிறிசேன செய்த சூழ்ச்சியையே கோட்டாபய ராஜபக்ஷவும் தற்போது செய்துள்ளார். இவை ஜனநாயக விரோத செயல்பாடுகளாகும். ரணில் விக்கிரமசிங்க தேசிய சொத்துக்களை விற்பனை செய்வதை தடுப்பதற்காகவே மக்கள் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு ஆணையை வழங்கினர். ஆனால் அவர் மக்கள் ஆணைக்குழு முரணாகவே இன்று செயல்படுகிறார். இது தோற்கடிக்கப்படவேண்டிய அரசியல் கலாசாரமாகும். ரணில் விக்கிரமசிங்க எப்போதும் ராஜபக்ஷாக்களிக் பாதுகாவலராகவே செயல்படுவார். மக்களின் சொத்துக்களைக் கொள்ளையடித்ததன் விளைவாகவே இன்று முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கடற்படை முகாமில் மறைந்திருக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

எனவே ராஜபக்ஷக்களையும் ரணில் விக்கிரமசிங்கவையும் ஒருமித்து தோல்வியடையச் செய்ய வேண்டும். அதற்கு புதியதொரு பாராளுமன்றத்தை தெரிவு செய்வதற்கு மக்களுக்கு வாய்ப்பளிக்கப்பட வேண்டும். தற்போது ரணில் மேற்புறமாக இருந்தாலும் உட்புறமாக பசில் ராஜபக்ஷவே உள்ளார். பாராளுமன்ற உறுப்பினர்களை விலைக்கு வாங்கும் நடவடிக்கைகளை ரணில் ஆரம்பித்துள்ளார். அதன் மூலம் பாராளுமன்றத்தில் பெரும்பான்மையை திரட்ட முற்படுவதாகவும் தகவல்கள் கிடைத்துள்ளன.

சுயம்வரத்தில் மணப்பெண் தனது மணவாளனை தெரிவு செய்து மாலையிடச் செல்லும் இறுதி நேரத்தில் நானும் சுயம்வரத்தில் கலந்து கொள்கின்றேன் என்று அறிவிப்பதைப் போலவே சஜித்தின் செயற்பாடு அமைந்துள்ளது. அதைப் பற்றி பேசுவது பிரயோசனமற்றது - என்றார்.

# வீடுடைத்து நகைகள் திருட்டு; பெண் உட்பட இருவர் கைது!

யாழ்ப்பாணம், மே 14

சண்டிலிப்பாயில் வீடுடைத்து 30 இலட்சம் ரூபாய் பெறுமதியான தங்க நகைகளை களவாடினர் என்ற சந்தேகத்தின்பேரில் பெண் உட்பட இருவர் கைது செய்யப்பட்டனர். அத்துடன், கைதானவர்களிடமிருந்த திருட்டு நகைகளை விற்பனை செய்ய உதவிய குற்றச்சாட்டில் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 4ஆம் திகதி மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்கு உள்பட்ட சண்டிலிப்பாய் - தொட்டிலடியில் உள்ள வீட்டில் எவருமில்லாத சமயம்பார்த்து வீட்டின் கதவை உடைத்து 30 இலட்சம் ரூபாய் பெறுமதியான தங்க நகைகள் திருடப்பட்டிருந்தன.

இதுதொடர்பில் மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பிராந்திய மூத்த பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

சம்பவ தினத்தன்று திருட்டு இடம் பெற்ற வீட்டுக்கு அண்மையாக உள்ள பகுதிகளில் பெறப்பட்ட சி. சி. ரீ. வி. காணொலி பதிவுகளின் அடிப்படையில் தெல்லிப்பழையை சேர்ந்த பெண் உட்பட இருவர் கைது செய்யப்பட்டனர்.

அவர்களிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் திருட்டு நகைகளை விற்பனை செய்ய உதவினார் என்ற குற்றச்சாட்டில் கிளிநொச்சியைச் சேர்ந்த ஒருவரும் கைது செய்யப்பட்டார்.

சந்தேக நபர்களிடமிருந்து திருட்டு நகைகள் கைப்பற்றப்பட்டுள்ளன. சந்தேக நபர்கள் மூவரையும் நீதிமன்ற நடவடிக்கைக்கு உள்படுத்த மானிப்பாய் பொலிஸார் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர். (ஐ)

## ரணிலுக்கு...

ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்குவதா, அல்லது இவ்விவகாரத்தில் எவ்வாறு செயற்பட வேண்டும் என்பன குறித்து ஆராயப்பட்டது.

இதன்போதே அரசில் இணைவதில்லை எனவும், பதவிகளை ஏற்பதில்லை எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (அ)

ஈழநாடு
Eelanadu

# யானைகூட பேர வாவியில் குளிக்கவேண்டி ஏற்படும்!

## ரணிலுக்கு பிக்குகள் எச்சரிக்கை

கொழும்பு, மே 14

**ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க புதிய பிரதமராக நியமிக்கப்பட்டதைத் தொடர்ந்து அவருக்கு ஆசி வழங்கிய பௌத்த மதத் தலைவர்கள் இலங்கையின் தேசிய நெருக்கடி குறித்து நுட்பமான எச்சரிக்கை ஒன்றை விடுத்துள்ளனர்.**

பிரதமராக பதவிப் பிரமாணம் செய்துகொண்ட பின்னர், புதிய பிரதமர் நேற்று முன்தினம் மாலை பல பௌத்த மதத் தலைவர்களை சந்தித்து ஆசிகளைப் பெற்றுக் கொண்டார்.

அதன் பின்னர், நாட்டில் தற்போது நிலவும் அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடிகளுக்குத் தேவையான சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்தத் தவறினால் புதிய பிரதமரும் பொதுமக்களின் கோபத்துக்கு ஆளாக நேரிடும் என பிக்குகள் எச்சரித்தனர்.

"சமீபத்திய சம்பவங்களைப் போலவே, யானையும் பேரை ஏரியில் குளிக்க வேண்டியிருக்கும்," என்று அவர்கள் ரணில் விக்கிரமசிங்கவிடம் சுட்டிக்காட்டினர்.

மேலும், நாட்டிலுள்ள இளைஞர்கள் மற்றும் பொதுமக்களின் விருப்பத்திற்கு செவிசாய்க்குமாறு அவர்கள் வலியுறுத்தினர். (அ)



## போதை மாத்திரை, ஹெரோயினுடன் மல்லாகத்தில் இளைஞர் கைதாகினார்

யாழ்ப்பாணம், மே 14

300 போதைமாத்திரைகள் மற்றும் 2 கிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் 22 வயதுடைய ஒருவர் கைது செய்யப்பட்டார்.

மல்லாகத்தைச் சேர்ந்த ஒருவரே நேற்று முற்பகல் தெல்லிப்பழை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டார். சந்தேக நபர் மேலதிக விசாரணைகளுக்காக தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டுள்ளார். (அ)

## எம்.பிக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த நடவடிக்கை

கொழும்பு, மே 14

அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்புக்காகவும் உப பொலிஸ் பரிசோதகர் ஒருவர் உட்பட 6 அதிகாரிகளை நியமிக்குமாறு பொலிஸ்மா அதிபர் ஆலோசனை வழங்கியுள்ளர்.

பாராளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நோக்கில் அமைச்சர்களின் பாது காப்பு பிரிவு புதிய அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையிலேயே இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

## தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கல்விசாரா ஊழியர்கள் பகிஷ்கரிப்பு

அம்பாறை, மே 14

தென்கிழக்குப் பல்கலைக்ககழக கல்விசாரா ஊழியர்கள் கடந்த வியாழக்கிழமை தொடக்கம் 48 மணித்தியால பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டதாக தென்கிழக்குப் பல்கலைக்ககழக ஊழியர் சங்கத்தின் தலைவர் எம்.எம்.நௌபர் தெரிவித்தார்.

கொழுப்பு, காலி முகத்திடல் மக்கள் போராட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட மிலேச்சத்தனமான தாக்குதல்களைக் கண்டித்து இந்தப் பணிப் பகிஷ்கரிப்பு முன்னெடுக்கப்பட்டதாக அவர் கூறினார். (அ)

## கல்முனை மாநகர சபையின் புதிய உறுப்பினராக பதுர்தீன்

கலுமுனை, மே 14

கல்முனை மாநகர சபையின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சார்பான புதிய உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ள மருதமுனையை சேர்ந்த பதுர்தீன் ஷர்மில் ஜஹான் கடந்த வியாழக்கிழமை தனது சத்தியப்பிரமாண பத்திரத்தை மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீபிடம் கையளித்து பதவியேற்றுக்கொண்டார்.

இந்நிகழ்வில் சபைச் செயலாளர் ஏ.எம்.ஆரிப், கட்சி ஆதரவாளர்கள் உள்ளிட்டோரும் பங்கேற்றனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் கல்முனை மாநகர சபை உறுப்பினர் ஏ.எல். றபீக் ஒழுக்காற்று நடவடிக்கை மூலம் உறுப்பினர் பதவியில் இருந்து நீக்கப்பட்டதை அடுத்து அவ்விடத்திற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அம்பாறை மாவட்ட அமைப்பாளரும் சமூக சேவகரும் வர்த்தகருமான பதுறுதீன் சர்மில் ஜஹானை புதிய உறுப்பினராக நியமிக்க ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளரும் முன்னாள் ராஜாங்க அமைச்சருமான தயாசிறி ஜயசேகரவால் நியமன கடிதம் அண்மையில் வழங்கப்பட்டது.

இவர் கடந்த உள்ளூராட்சி மன்றத்தேர்தலில் கல்முனைத் தொகுதியில் ஸ்ரீலங்கா சுதந்திரக் சுதந்திரக் கட்சியில் போட்டியிட்டு தொகுதியில் இரண்டாவது அதிகப்படியான வாக்கு பெற்றுக் கொண்டவர் ஆவார். (அ)

## ரணில் துரோகி!

### ராஜித சேனாரத்ன விமர்சனம்

கொழும்பு, மே 14



"மக்களால் நிராகரிக்கப்பட்டு, தேசியப் பட்டியல் ஊடாக, பாராளுமன்றம் வந்த ரணில் விக்கிரமசிங்கவை பிரதமராக்கியது தவறு. மக்களுக்கு துரோகம் இழைக்கும் வகையில் ரணில் முடிவெடுத்துவிட்டார்."

-இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கூறினார்.

"ராஜபக்ஷக் களை விரட்ட வேண்டும் என மக்கள் போராடிவரும் நிலையில், மக்களுக்கு துரோகம் இழைக்கும் வகையில் அவர்களை பாதுகாக்க ரணில் ராஜபக்ஷ களமிறங்கியுள்ளார். அவர் ரணில் விக்கிரமசிங்க அல்லர். இவர்களின் ஆட்சியை மக்கள் ஏற்க மாட்டார்கள். அதனால்தான் ரணில் கோ கிராமமும் அமைக்கப்பட்டுவிட்டது." - என்றார். (அ)

## அலரிமாளிகைக்கு முன் 'நோ டீல் கம' அமைப்பு!

கொழும்பு, மே 14

பிரதமராக பதவியேற்றுள்ள ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில், அலரிமாளிகைக்கு முன்பாக 'நோ டீல் கம' உருவாக்கப்பட்டுள்ளது.

மஹிந்த ராஜபக்ஷ, பிரதமர் பதவியை துறக்க வேண்டும் என வலியுறுத்தி அலரிமாளிகைக்கு முன்பாக 'மைனா கோ கம' என்ற பெயரில் கிராமமொன்று உருவாக்கப்பட்டு, போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

தற்போது ரணில் விக்கிரமசிங்க பிரதமராக பதவியேற்றுள்ளார். இது 'அரசியல் டீல்' என விமர்சிக்கப்படுகின்றது.

இந்நிலையிலேயே, ரணிலுக்கு எதிராகவும் கிராமமொன்று உதயமாகியுள்ளது.

அதேவேளை, கோட்டாகோகமவிலும் போராட்டம் தொடர்கின்றது. நேற்று 35 ஆவது நாளாக இடம் பெற்றது. (அ)

## சதுரங்க விளையாட்டு விளையாடும் ரணில்

### மஹேல ஜெயவர்தன தெரிவிப்பு

கொழும்பு, மே 14

பிரதமர் ரணில் விக்ரமசிங்கவின் நியமனம் குறித்து இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் மஹேல ஜயவர்தன கேள்வி எழுப்பியுள்ள நிலையில், அரசியலை சதுரங்க விளையாட்டு என விக்ரமசிங்க வர்ணிக்கும் பழைய காணொளியை பதிவிட்டுள்ளார்.

பாராளுமன்றத்திலும் அவர் நியமிக்கும் அமைச்சரவையிலும் விக்ரமசிங்கவின் பெரும்பான்மைப் பலம் அவர் உண்மையிலேயே கிராண்ட்மாஸ்டரா அல்லது மாஸ்டர் ஒப் டீலா என்பதை வெளிப்படுத்தும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார். (அ)



## வல்வெட்டித்துறையில் முள்ளிவாய்க்கால் கஞ்சி

யாழ்ப்பாணம், மே 14

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு நேற்று முற்பகல் 10:30 மணிக்கு, வல்வெட்டித்துறை சல்லியாவத்தை அம்மன் கோவிலடியில் இடம்பெற்றது.

தொடர்ந்து அல்வாய் முத்துமாரி அம்மன் ஆலய முன்றலிலும் முள்ளிவாயக்கால் கஞ்சி வழங்கப்பட்டது.

ஒப்பரேசன் லிபரேசன் தாக்குதல் காலத்தில் குறித்த கோவிலில் தஞ்சமடைந்திருந்த மக்கள் மீது எறிகணைத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டு 36 பொது மக்கள் படுகொலை செய்யப்பட்டனர். இதனை நினைவு கூரும் முகமாக முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை பேரியக்கத்தின் இணைப்பாளர் வேலன் சுவாமிகளும் கலந்துகொண்டார். (அ-02-03)







இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 14.05.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**

6.00 மணி : பக்திப்பாடல்கள்

6.30 மணி : வணக்கம் டான்



6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்

6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்

6.55 மணி : இன்றைய பலன்

7.05 மணி : உளவியல் கருத்து

7.15 மணி : கதைவழி அறமொழி-யோன்சன் ராஜ்குமார் ஆசிரிய ஆலோசகர் யாழ்ப்பாணம் வலயக்கல்வி

07.30 மணி : பத்திரிகைகள் ஒரு பார்வை

8.30 மணி : காலை செய்திகள்

9.00 மணி : கலாட்டா காலை-நேரலை

10.30 மணி : TIK TOK

11.00 மணி : அந்தக்காலம் இந்தக்காலம் -மறு ஒளிபரப்பு

**பகல்**

12.00 மணி : வீக் என்ட் கொண்டாட்டம் (நேரலை)

1.00 மணி : மழலைகள் நேரம்

1.30 மணி : WEEK END MOVIE-ஆசை ஆசையாய்

04.30 மணி : மனிதனின் மறுபக்கம்




05.00 மணி : அந்தி மந்தாரை-நேரலை

6.00 மணி : எதுசரி எதுபிழை-ராஜபக்ச அரசிற்கு எதிரான போரட்டத்தின் வழிமுறைகள் பகுதி-02



**இரவு**

07.00 மணி : கொழும்பு-16- உங்களுக்கு தெரியாத கொழும்பு

07.30 மணி: டான் சினி மரதன் குறும்பட போட்டி நிகழ்ச்சி

8.00 மணி : இரவுச் செய்திகள்

09.00 மணி: டான் பட்டிமன்றம்

10.00 மணி : நெற்றிக்கண்

## DAN COMEDY HD

**காலை**

6.00 மணி : சிரி சிரி சிரி

8.00 மணி : சிரிப்பு சரடிவெடி

10.00 மணி : ஒரு பட கொமடி

11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**

1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்

3.00 மணி : குண்டக்க மண்டக்க

5.00 மணி : ஒரு பட கொமடி

6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**

8.00 மணி : ஒரு படக்கொமடி

9.00 மணி : சிரிப்போ சிரிப்பு

10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**

6.00 மணி : பனிப்பூக்கள்

7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்

8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்

9.00 மணி : மெல்லிசை

10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**

12.00 மணி : ராஜா ராணி

1.00 மணி : விசை இசை

3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)

4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)

5.00 மணி : இனிது இனிது

6.00 மணி : என்றென்றும் இசை

7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**

8.00 மணி : காற்றில் வரும் கீதம்

9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**

5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்

6.00 மணி : தரம் 07 - தமிழ்

6.45 மணி : தரம் 08 - தமிழ்

7.30 மணி : தரம் 09 - கணிதம்

8.15 மணி : தரம் 10 - கணிதம்

9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்

10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி

11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**

12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்

1.00 மணி : தரம் 07 - தமிழ்

2.00 மணி : தரம் 08 - தமிழ்

3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்

3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்

4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்

5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்

5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்

6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**

7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

## ஓம் ரிவி

**காலை**

5.00மணி : சிவாய மந்திரம்

6.00 மணி : சுப்ரபாதம்

6.30 மணி : சுப்ரபாதம்

7.00 மணி : இன்றைய சிந்தனை

7.05 மணி : இன்றைய நாள்

7.20 மணி : ஈழத்து சித்தர்கள்

7.30 மணி : மங்கள இசை

8.00 மணி : அருளுரை

8.30 மணி : திருவாசகம்

9.00 மணி : திருவிழா-01

10.00 மணி : பஜனை

10.30 மணி : தமிழககோவில் திருவிழா

11.00 மணி : பக்திமலர்

**பகல்**

12.00 மணி : திரையில் பக்தி

12.30 மணி : திருவிழா-02

6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**

7.00 மணி : செய்திகள்

7.30 மணி : அருளுரை

8.00 மணி : திருவிழா-01

## CHANNEL HOLY MARY

**காலை**

7.00 மணி : நாளொரு நற்சிந்தனை

8.00 மணி : ஜெபமாலை

9.30 மணி : ஞானவழி (மறு ஒளிபரப்பு ஞாயிறு)

10.00 மணி: நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)

10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)

11.30 மணி : மறைக்கல்வி (மட்டக்களப்பு) ஞாயிறு

**பகல்**

12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)

01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)

03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம் மறு ஒலிபரப்பு)

04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)

05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)

06.00 மணி :நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)

06.00 மணி : இயேசுவின் போதனைகள்

07.30 மணி : அன்பியம்( சனி மறுஒளிபரப்பு)

## Pirai Television

**காலை**

6.00 மணி : கிராத்

7.00 மணி : இறை சிந்தனை

7.30 மணி : இஸ்லாமிய பாடல்

8.00 மணி : கலந்துரையாடல்

9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்

10.00 மணி : மனதோடு பேசலாம்

10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்

11.00 மணி : சுவனப்பாதை

11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**

12.00 மணி : லுகர் அதான்

12.30 மணி : இஜ்லாமிய வரலாறு

1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்

2.00 மணி : கஸீதா

2.30 மணி : இறை சிந்தனை

3.00 மணி : பாடல்கள்

3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்

4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்

5.00 மணி : இறை தென்றல்

6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**

7.00 மணி : பிறை பிரசங்கம்

8.00 மணி : இஸ்லாமிய வரலாறு

இலங்கை தினசரி மற்றும் வாரந்த பத்திரிகைகளை உங்கள் மொபைலில் பெற்றுக்கொள்ள எம்மோடு இணையுங்கள்

Viber இல் இணைய இங்கே CLICK செய்யுங்கள்

Viber




இக் குழுமத்தில் இணைவதனால் மற்றவர்கள் உங்கள் தொலைபேசி இலக்கத்தை பார்வையிட முடியாது

CLICK

